# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

**KARKATHAR OPPURAVU**

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–16, இதழ் – 5<br>Volume - 16, Issue - 5 | சித்திரை திங்கள்<br>April 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |





PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை - 8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம் - 2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை - 8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு
திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஒரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248




Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com






**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)




# FLAT FOR SALE

# TAMBARAM WEST

**MULLAI NAGAR 1st Street**

**Close to Rly Station**

**Possession - May 2025**

- CALM & PRIME LOCATION
- STILT + 3 FLOORS – ONLY 3 FLATS
- 1400 SQ.FT. – 3 BHK
- CCP, MODULAR KITCHEN, CCTV
- QUALITY GROUND WATER,
- DRAINAGE CONNECTION

## *Upcoming Projects*

**RAM NAGAR**
**Madipakkam** | **2BHK-86 L**

**PADMANABHA NAGAR**
**Adyar** | **2 BHK - 980 sqft**
**3 BHK-1840 sqft**

*We undertake*
**CONSTRUCTION ON TURN KEY**
*basis right from approval.*
*For profitable* **JOINT VENTURE**
*Land owners are invited.*

# MALAR FOUNDATIONS

**94440 70108 / 70109 41135 / 97870 61547**



ஆசைக்கு
DOSAI
Mushroom Dosai - 150
Paneer Dosai - 150
Gobi Dosa - 150
Set Dosai Vada Curry - 150
Mappilai Samba Dosai - 150
Millet Dosai - 150
Mysore Masala Dosai - 150
Podi Onion Rava Dosai - 150
Modakkathan Dosai - 100
Butter Jam Uthappam - 100
Surraikai Adai - 120
hotel saradharam
chidambaram
FOOD FESTIVAL
Geethanjali
A/C VEGETARIAN RESTAURANT
Nattiya
A/C COCKTAIL LOUNGE
Darbar
A/C CONFERENCE HALL
Anupallavi
MULTI CUISINE RESTAURANT

# வாழ்க மணமக்கள்




மணமக்கள்

**S. முகுல் வசந்த்** B.E., MBA., - **R. சுஷ்மிதா விஷாலினி** B. Arch.,
Infosys KP&J Engineers Pvt Ltd.

மண நாள் : **10-02-2025, திங்கட்கிழமை**

**G.M. வாண்டையார் திருமண மண்டபம்**, சிதம்பரம்.

திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி விழாவினை சிறப்பித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்.

மணமகன் பெற்றோர்
**N. செந்தில்,** M.Sc., M.Phil.,
ASO, Annamalai University
**R. கண்ணகி,** MA., MPhil., B.Ed.,
HM, Govt. Girls Hr. Sec. School, Chidambaram.

மணமகள் பெற்றோர்
**A. இராமலிங்கம்,** B.E., MISTE
PENTAGONS Engineer & Architect
**R. உஷா,** M.Sc., B.Ed.,
அடையார், சென்னை






DAC
DREAM ASCEND CONQUER
Now It's Women's Turn
Book Your Home in
Your Woman's Name to Avail
FREE
REGISTRATION
CHARGES!
VALUE UPTO
8*
LAKHS
NOW
IT'S TIME TO TAKE A
W TURN
APARTMENTS | VILLAS | PLOTS
Tambaram | Manapakkam | Madambakkam | Medavakkam | Pallikaranai | Pammal | Porur | Sholinganallur
Guduvanchery | Navalur | Kuthambakkam | Coimbatore
*T&C Apply
For Website
www.dacdevelopers.com
100+ PROJECTS
3M+ SQFT CONSTRUCTION
2800+ HAPPY FAMILIES
93003 93003

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **“Chidambaram Spiritual Stay”**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு “Booking.com” மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சமூக நலம் சார்ந்த பணிகளை “SPIRITUAL STAY” நிறுவனத்துடன் இணைந்து இவ்வருடம் சித்திரை மாதம் முதல் தொடங்க உள்ளோம். உங்கள் ஆதரவுடன் முதல் பணியாக திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகளை உரிய கட்டணத்துடன் செய்து தர உள்ளோம். அடுத்த முயற்சியாக மூத்த குடிமக்கள் சேவை மையம் தொடங்க உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

தொடர்பு 1 : **T.S. ஜோதிபிரகாசம்**
மேலாளர்
78454 15283

தொடர்பு 2 : **G. வாகீசன்**
ஸ்ரீ ஆடல்வல்லான் உணவு தயாரிப்பாளர்
94439 25170

**இதழின் உள்ளே....**




சங்க நிகழ்வுகள் ........ 11–21

மணமகன் / மணமகள் தேவை ........ 22–24

சிறுவர் பகுதி........ 42 – 45

தவணை முறை விற்பனை........ 47

சங்கப் பலகை ........ 49

அயோத்தி – ஓர் அற்புத தரிசனம்........ 51



**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



எம் கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் கார்காத்தார் ஒப்புரவின் இனிய தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள். புதுப்புது சிந்தனைகளும், புதுப்புது உறவுகளும் இப்புத்தாண்டில் கிடைக்கவும், மற்றவர்களிடம் அன்பும், நட்பும் பாராட்டி, ஒருவருக்கொருவர் நலம் விசாரித்து, அக்கறைகாட்டி, வலுவான உறவுப்பாலம் அமையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்து கூறுகிறோம்.

கடந்த மாத இதழில் நாம் வாழ்த்திய நம் வாழ்த்து பலித்து, நமது பாரதம் Champions Trophy யை ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் வென்று, உலகத் தர வரிசையில் முதலிடத்தில் இருப்பது நமக்குப் பெருமை அளிப்பதாக உள்ளது.

இந்த வருட நிதிநிலை அறிக்கைகளில், நடுவண் அரசு வருமானவரி உச்ச வரம்பு 12 லட்சமாக உயர்த்தி இருப்பது நடுத்தர வர்க்க மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டம், சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாடு, மக்களின் முதலீடு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சிக்கான திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையில் ஒரு லட்சம் மகளிரை தொழில் முனைவராக உயர்த்திடும் திட்டம், இரண்டு வருடங்களில் மாணவர்களின் தொழில் நுட்பத்திறனை மேம்படுத்த 20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி, கைக்கணினி வழங்கும் திட்டம் போன்றவைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. நாட்டின் முன்னேற்றத்திற்கு இத்திட்டங்கள் உறுதுணையாக இருக்குமென நம்புகிறோம்.

போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலத்தில், விண்வெளிக்கு எட்டு நாள் பயணமாகச் சென்று, 286 நாட்கள் தங்கியிருந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ்; வீரர் புட்ச் வால்மோர் இருவரும் டிராகன் விண்கலத்திலிருந்து வெளியே வரும் போது உலக மக்கள் நிம்மதி அடைந்தனர் எனில் அது மிகையல்ல. பத்திரமாக

அவர்கள் பூமிக்குத் திரும்பியதற்கு கடவுளுக்கு நன்றி கூறுவோம். அது மட்டுமல்ல; இவ்வாண்டு இறுதியில் எலான்மஸ்க் அவர்களின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஆக்சியாம்–4 என்ற விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்ப உள்ளது. இந்த பயணத்துக்கு தலைமையேற்க இருப்பவர் இந்திய விமானப்படை கேப்டன் சுபான்சு சுக்லா என்பது இந்தியாவுக்குப் பெருமை.

இவ்விதழ் தங்கள் கைகளுக்குக் கிடைக்கும் போது விடுமுறை விடப்பட்டிருக்கும். அவசியம் குழந்தைகளைத் தங்களின் கிராமத்துக்கும், உறவினர் இல்லங்களுக்கும் மற்றும் ஏதேனும் சுற்றுலாத் தலத்திற்கோ, கோவில்களுக்கோ அழைத்துச் செல்ல ஒரு பத்து தினங்களை நீங்களும் ஒதுக்குங்கள். குழந்தைகளுடன் விடுமுறையில் தங்களின் நேரத்தை மகிழ்ச்சியாக செலவிடுங்கள்!

நம் குழந்தைகள் மகிழ்ச்சியாக விடுமுறையைக் கொண்டாட வாழ்த்துகிறோம்.

நன்றி ! வணக்கம்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. 8248449204**க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

## சங்க நிகழ்வுகள்

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர் :

23-03-25 அன்று வாழ்க வளமுடன் மினி ஹாலில் சங்க ஆலோசகர் திரு. V. சண்முகசுந்தரம் அவர்களது வரவேற்பு மற்றும் இறைவணக்க பாடலுடன் செயற்குழு கூட்டம் துவங்கியது.

செயலாளர் திரு. G. தியாகராஜன் அவர்கள், சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையையும் தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளையும் விவரித்து பதிவு செய்யப்பட்டது. சங்க பொருளர் திரு. V. செல்வக்குமார் நிதிநிலை விவரத்தினை சமர்ப்பித்தார்கள்.

மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடுவது பற்றியும் மற்றும் சங்க வளர்ச்சிக்கான ஆலோசனை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. S. கல்யாணசுந்தரம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

மாலை 4.00 மணியளவில் மகளிர்தினம் மகளிர் அணியினரால் திருமதி. R. கலையரசி அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக, பொறியாளர் திருமதி. சுமதி ராஜசேகரன் செயற் பொறியாளர் தமிழ் நாடு மின்சார வாரியம் மற்றும் திருமதி. N. சத்தியபிரியா தமிழ்நாடு மகளிர் திறன் மேம்பாட்டு பயிற்சியாளர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

மகளிர் அணியினரால் ஆன்மீக நாடகம் நடத்தப்பட்டது. மேலும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. திருமதி. ரேவதி கண்ணன் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

- G. தியாகராஜன், செயலாளர்.

9042957792

### நங்கநல்லூர் மகளிரணி

23/03/2025 அன்று நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சங்க மகளிரணியின் 2025-ம் ஆண்டிற்கான "சர்வதேச மகளிர் தினம்" வெகு விமரிசையாக நங்கநல்லூர் "வாழ்க வளமுடன் மினி ஹாலில்' சிறப்பு விருந்தினர்கள் திருமதி. சுமதி ராஜசேகர், திருமதி. சத்யா பிரியா மற்றும் சங்க நிர்வாகிகள் "மங்கல விளக்கேற்றுதல்" நிகழ்ச்சியுடன் தொடங்கியது. செல்வி தாரிகாவின் இறைவணக்கப் பாடல் நடந்தேறியது. சங்க மகளிரணி தலைவி திருமதி. கலையரசி ராஜசேகர் அவர்கள் தலைமை உரையில் 10/08/2025 அன்று கும்பகோணத்தில் நடைபெற இருக்கும் "கார்காத்த மகளிர்களின் சங்கமம்" (800 மகளிர் & 200 ஆண்கள்) குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள். நமது கலாச்சாரத்தை எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்வதற்காக இந்த சிறப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்கள்.

திருமதி. சுமதி ராஜசேகர் அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரிய துறையில் 33 வருட காலம் பணியாற்றியது குறித்தும், தற்போது அவர்கள் மேற்பார்வை பொறியாளராக பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும் கூறினார்கள்.

திருமதி. சத்யப்பிரியா அவர்களின் உரையில் வீட்டு உபயோகப்பொருட்கள் செய்வது, அதற்கான பயிற்சி அளிப்பது குறித்தும் 14/12/2025 மற்றும் 15/12/2024 அன்று சங்க கட்டிடத்தில் செய்து காண்பித்தும், எப்படி செய்வது என்பது குறித்தும் மகளிர் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்ததை தலைமையுரையில் எடுத்துரைத்தார்கள்.

செயலாளர் திருமதி. வனஜா சரவணன் அவர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில் சங்க உறுப்பினர்கள் சென்று வந்த சுற்றுலா குறித்தும், சமூகப் பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

சிறப்பு விருந்தினர் திருமதி. சுமதி ராஜசேகர் அவர்கள் உரையாற்றுகையில் மகளிர் முழுமையான தன்னிறைவு அடைந்து விட்டதாகவும் நமது வழிபாட்டு முறையான செவ்வாய் பிள்ளையார் வழிபாடு பற்றியும் ஆண் பெண் இருபாலரும் தத்தமது ஆரோக்கியத்தை

பேணி காப்பதின் அவசியத்தை எடுத்துரைத்தார்கள்.

பெண்ணாடத்திலிருந்து வருகை புரிந்த திருமதி. சத்யப்பிரியா அவர்கள் வீட்டு உபயோகப் பொருட்களை நாமே தயாரிப்பதன் மூலம் 50 விழுக்காடு பணம் சேமிக்கப்படும் என்பது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

நவீன கதாகாலசேபத்தில் ''ஆன்மீக அரசி'' திருமதி. கிருஷ்ணகுமாரி அவர்கள் திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகப் பெருமான் பக்தியைப் பற்றி மட்டுமல்ல நிறைய அறிவியல் கருத்துக்களையும், கரு வளர்ச்சியின் முதல் மாதம் முதல், குழந்தை தாயின் கருப்பையிலிருந்து வெளிவரும் வரை எடுத்துரைத்தும், அதில் கஷ்டப்பட்டதைவிட நாம் முழு மானிடராக இப்பூவுலகில் நடைபெறுபவை அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை எனவும், அதனை நல்லவிதமாக சமாளித்து, மற்றவர்களுக்கு எந்த தொந்தரவும் கொடுக்காமல், அவரவர் குடும்ப பிரச்சனைகளை குடும்பத்தினருடன் கலந்து பேசி சரி செய்வது நலமே என எடுத்துரைத்தனர்.

குமாரி அனுஸ்ரீ அவர்களின் பரதநாட்டியம் மிகவும் சிறப்பாக இருந்ததை அனைவரும் பாராட்டினர். திருமதி. லதா கார்த்திகேயன் அவர்கள் பிராணாயாமம் மற்றும் யோகாசனங்கள் செய்து காண்பித்து அசத்தினார்கள். பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சி மற்றும் கீழே நீர் சிந்தாமல் பாட்டிலில் நீர் நிரப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வயதில் மூத்தோர் மூவர் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக திருமதி. ரேவதி கண்ணன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது. அனைவரும் இரவு உணவு அருந்தி வீடு திரும்பினர்.

த. வனஜா
மகளிரணி செயலாளர்

## அண்ணாநகர் :

கூட்டம் 23–3–2025 அன்று அண்ணாநகர் ''நான் ஒரு ஐஏஎஸ்'' அகாடமியில் நடைபெற்றது.

தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் கூட்டத்தை தொடங்கி வைத்தார். அண்ணாநகர் சங்க உறுப்பினர் டாக்டர் பாலசுந்தரம் அவர்களின் மனைவி திருமதி. சந்திரா அம்மாள் மறைவிற்கும், அண்ணாநகர் சங்க உறுப்பினரும், டாக்டர் விவேகானந்தன், ஒப்புரவு ஆசிரியர் திரு. அன்பழகன் ஆகியோரது சகலையுமான டாக்டர். இராமசுப்பு அவர்களின் மறைவிற்கும், அண்ணாநகர் செயற்குழு உறுப்பினர் திரு. வி. இராஜசேகர் அவர்களின் அக்காவும், கேசிங்கன் திரு. சபாபதி அவர்களின் மனைவியுமான எஸ். தமயந்தி அவர்களின் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சீப் பிளானராக பதவி உயர்வு பெற்ற சி. எம்டி ஏ சிவக்குமார் அவர்களது பணி சிறக்க வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. சங்க உறுப்பினர் திருவொற்றியூர் திரு. சண்முகம் அவர்களின் மகன் திருமணம் 12.3.2025 அன்று நடைபெற்றது. மணமக்கள் டாக்டர். எஸ். வீரபாகு, டாக்டர். ஆர். இளவரசி ஆகியோர்க்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. வி. இராஜசேகர் அவர்களின் பேத்தியும் திருமதி. அனுராதா, திரு. இராமன் விஸ்வநாதன் அவர்களின் மகளுமான செல்வி. ஷ்ரேயா இராமன் அவர்கள் எழுதிய ஸ்பார்க், ஸ்பைஸ் அண்டு எ டச் ஆப் ஐஸ் என்ற ஆங்கில நாவல், கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2.3.2025 அன்று வெளியிடப்பட்டதற்கும், மென்மேலும் நிறைய நாவல்கள் எழுதவும் சங்கத்தின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

கொரட்டூர் திரு. ஜி. பாலசுப்பிரமணியன், பொருளாளர் அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

– என். ஆனந்தகணபதி.

## பெருங்களத்தூர் :

செயற்குழு கூட்டம் 23–02–2025 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அனைவரும் இணைந்து தமிழ் தாய் வாழ்த்து பாட நடைபெற்றது. தலைவர் R. கார்த்திகேயன் அவர்கள் அனைவரையும் வரவேற்று வருகின்ற 30–03–2025 அன்று KBF சார்பில் கார்குல மகளிர் தொழில் முனைவோர் சிறப்பு கூட்டம் சிவாலி ஹாலில் நடைபெறுவது குறித்து விளக்கி கூறினார்கள். புதியதாக தொழில் தொடங்க விரும்பும் கார்குல மகளிரை இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடைய செயற்குழு உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. இணைச்செயலாளர் திரு. V. சேகர் அவர்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவர்கள் செலுத்தும் சந்தா தொகையுமே ஒரு சங்கத்திற்கு அஸ்திவாரம் என்று கூறி, இதுவரை சந்தா செலுத்தாத உறுப்பினர்களை குழுவாக நேரில் சென்று மே மாத இறுதிக்குள் வசூல் செய்யலாம் என்பதை ஏற்றுக்கொண்டு மே மாத இறுதிக்குள் வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஒரு நாள் ஆன்மீக சுற்றுலாவாக சிறுவாபுரி முருகன் கோவில், பெரியபாளையத்தம்மன் கோவில்,

சுருட்ட பள்ளி சிவன் கோவில் மற்றும் வழியில் உள்ள கோவில்கள் தரிசிக்க ஏப்ரல் இறுதி / மே முதல் வாரத்தில் சென்று வரலாம் என்று முடிவு செய்யப்பட்டு திருவாளர்கள் R. கார்த்திகேயன் மற்றும் R. நெடுஞ்செழியன் ஆகியோரை பொறுப்பாளர்களாக இருக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. அதுபோல் குருவாயூர் சென்று வரலாம் என்றும் அதற்கான விபரங்களை திரு. V. பரணி அவர்களை சேகரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மறைந்த பூர்வீகம் பண்ணப்பட்டு தெய்வத்திரு. வேணுகோபால் – திருமதி. ரேவதி அவர்களின் மகள் திருமதி. தீபலெஷ்மி, பூர்வீகம் நெய்த வாசல் திரு. S. ஆனந்தகுமார் – திருமதி. மலர்விழி அவர்களின் மகள் திருமதி. அனிதா ஆகியோரின் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிறைவாக பொருளாளர் திருமதி. R. சுமதி அவர்கள் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் நிறைவுற்றது.

– கோ. ராஜகோபாலன், செயலாளர்.

## புதுச்சேரி : மகளிர் தின விழா

மகளிர் அணி சார்பில் மகளிர் தினவிழா **08–03–2025** சனிக்கிழமை அன்று மாலை **4.00** மணியளவில் புதுச்சேரி லாஸ்பேட்டை குறிஞ்சி நகர், **9**–வது கிராஸ் குடியிருப்போர் நலச்சங்க மனமகிழ் மன்றத்தில் நடைபெற்.றது. முன்னதாக கூட்ட அரங்கம் நம் கார்குல கொடிகளாலும், மாவிலை மற்றும் தென்னங்குருத்து தோரணங்களாலும், பிளக்ஸ் பேனர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு மாநில பொதுச் செயலாளர் திருமிகு. M. பாலசுப்ரமணியன் அவர்களும், திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். மகளிர் அணியை சார்ந்த சொந்தங்கள் குத்துவிளக்கு ஏற்றி இறைவணக்கம் பாட கூட்டம் தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் மகளிர் அணி தலைவி திருமதி. கண்ணகி செல்வகுமார் தலைமை உரை நல்கிட செயலாளர் திருமதி. சுந்தரவல்லி ஆனந்தன் வரவேற்புரை ஆற்றினார்கள். புதுச்சேரி சங்க தலைவர் திரு. J. ராஜன்பாபு, செயலாளர் திரு. S. வெங்கடேசன், பொருளாளர் திரு. K. ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சிறப்பு அழைப்பாளராக திருமதி. டாக்டர் உமா பிரதாபன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். லயன் சங்கங்களின் முன்னாள் ஆளுநர் (PDG) திருமதி. MJF Lion. விஜயலட்சுமி சிவக்குமார் அவர்கள் கலந்து கொண்டு பெண்மையின் சிறப்பையும், உடல் நலம் காப்பது, நோயற்ற வாழ்வு குறித்தும் அழகாக பேசினார்கள். திருமதி. வானதி ரவீந்திரன் அவர்களின் வாழ்த்து செய்தி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணுரிமை, பெண் விடுதலை குறித்தும் மகளிர் அணி கௌரவத் தலைவி திருமதி. விஜயகுமாரி பாரிவள்ளல் அவர்கள் உரையை திருமதி. சாந்தி ராஜன்பாபு வாசித்தார்கள். திருமதி. Er. லட்சுமி ரவிச்சந்திரன், திருமதி. Dr. கயல்விழி பாலமுருகன் மற்றும் திருமதி. கலைமாமணி விஜயலட்சுமி ஆகியோர் மிக அருமையாக சொற்பொழிவாற்றினர்.

பின்னர் பொது செயலாளர் மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்படுவது குறித்தும், சமுதாயத்தில் மகளிர் பங்கு குறித்தும் நம் இனத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் சம உரிமைகள் குறித்தும் எடுத்துரைத்தார்கள். முனைவர் திரு. சிவ. மாதவன் அவர்கள் நம் இனத்தில் பெண்களுக்கு கொடுக்கப்படுகிற மரியாதை பற்றி சிறப்பாக விளக்கினார்கள். தொடர்ந்து திரு. கேப்டன். M. பிரதாபன் தனது உரையில் சிறப்பான முறையில் பல்வேறு உதாரணங்களை எடுத்து கூறி மகளிர் சிறப்புகளையும், ஆன்மீகம் பற்றியும் பேசினார்கள். திருச்சியில் இருந்து வந்திருந்த திருச்சி மகளிர் அணி தலைவி திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியம் அவர்கள் வருகின்ற ஆகஸ்ட் மாதம் கும்பகோணத்தில் நடக்க இருக்கின்ற மகளிர் மாநாட்டில் கலந்து கொள்ள வருமாறு அனைவரையும் அழைத்தார். மகளிர் அணி சார்பில் விழாவுக்கு மிகவும் உறுதுணையாக இருந்த திரு. S. தமிழ்ச்செல்வன் அவர்கள் மற்றும் திரு. S. சிவசண்முகம் அவர்கள், திரு. G. ஞானசேகரன் அவர்கள், திரு. T. பாலகிருஷ்ணன் அவர்கள், திரு. C. வடிவேல் அவர்கள், திரு. S. ராமலிங்கம் அவர்கள், திரு. U. ஆனந்தன் அவர்கள் மற்றும் மகளிர் அணியினர் திருமதி. உமா சிவசண்முகம் அவர்கள், திருமதி. ஜெயலட்சுமி சிதம்பரம் அவர்கள், திருமதி. தீபா சிவக்குமார் அவர்கள், திருமதி. பானுமதி பாலு, திருமதி. சாரதா மணிகண்டன் அவர்கள், திருமதி. நிர்மலா ஞானசேகரன், திருமதி. சாந்தி ராஜன் பாபு அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். கூட்டத்தில் +2 படிக்கும் மாணவனுக்கு கல்வி உதவித்தொகை புதுச்சேரி சங்கத்தின் சார்பில் ரூ. **5000/–** வழங்கப்பட்டது.

கூட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடன நிகழ்ச்சி பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. மகளிர்க்கான விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. இளைஞர் அணி

தம்பிமார்கள் அனைத்து வேலைகளையும் சிறப்பாக செய்திருந்தார்கள். இறுதியாக பொருளாளர் திருமதி. மலர்கொடி தமிழ்செல்வன் அவர்கள் நன்றி உரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது. அருமையான இரவு உணவினையும், மாலை டிபனையும் முருகன் cafe உரிமையாளர் திரு. T. பாலதண்டாயுதம் பிள்ளை அவர்கள் வழங்கினார்கள். புதுச்சேரி சங்கம் எல்லாவற்றிலும் முதன்மையான சங்கம் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்தது.

J. ராஜன்பாபு, தலைவர்.

## விருத்தாசலம் :

02–03–2025 அன்று சேவைகுழு 2025 புதிய மகளிர் அணி, இளைஞர் அணி உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்ட கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. வரும் தமிழ் புத்தாண்டு முன்னிட்டு அனைத்து சங்கத்தினரின் வீடுகளுக்கு பஞ்சாங்கம் வழங்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறுதியில் மகளிர் அணி நன்றி உரையுடன் நிறைவு செய்தார்கள்.

- J. சந்திரசேகரன், தலைவர்.

## அரியலூர் :

கார்காத்தார் சங்கத்தின் மகளிர் தின விழா 15.03.2025 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மகளிர் அமைப்பு சு. உமாமகேஸ்வரி அவர்கள் தலைமையில் அரியலூர் PNM திருமகள் திருமண மண்டபத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. முன்னிலை : மனோன்மணி சிவசங்கர், ஜெயந்தி செந்தில்குமார், குத்துவிளக்கு ஏற்றுதல் : இந்திரா முத்துகுமாரசாமி, ஹேமலதா சிவக்குமார், சக்தி பாலகிருஷ்ணன், திரிபுரசுந்தரி செல்வராஜ் : மணிமேகலை சண்முகசுந்தரம், சிறப்பு அழைப்பாளர்கள் : K.K.R. சுரேஷ் (எ) ராஜ்சுந்தரம் பிள்ளை தலைவர் மாநில கார்த்தார் வேளாளர் சங்க கூட்டமைப்பு மு. பாலசுப்பிரமணியன் பிள்ளை பொது செயலாளர், G. இராமநாதன் பிள்ளை பொருளாளர், கைலை சண்முகம் பிள்ளை அமைப்பு செயலாளர், S. ரவீஸ்வரன் பிள்ளை துணை தலைவர், செந்தில்நாதன் பிள்ளை மண்டல செயலாளர், விழா தொகுப்பாளர் : Dr. இரா. விஜயவல்லி விரிவுரையாளர், அரசு கலை கல்லூரி மயிலாடுதுறை, சிறப்பு சொற்பொழிவாளர்கள் : சாந்தி ஜெயராமன் எழுத்தாளர், கிருஷ்ணவேணி மதிவாணன், இன்னிசை : வீணை கச்சேரி, பரதம், செல்வி. கீ.ப. நிரஞ்சனா நன்றியுரை : V. செல்வராஜ் பிள்ளை தலைவர, அரியலூர் கார்காத்தார் சங்கம் அனைத்து மாநில பொறுப்பாளர்கள், சிறப்பு பேச்சாளர்கள் மற்றும் வீணை இசை அளித்தவருக்கும் பொன்னாடை அணிவித்து, நினைவு ஷீல்டு வழங்கப்பட்டது. வந்திருந்த அனைத்து மகளிருக்கும் பரிசுப்பொருள் வழங்கப்பட்டது.

நாட்டுப்பண் : மதிய விருந்துடன் விழா இனிதே நடைபெற்றது.

- V. செல்வராஜ் பிள்ளை தலைவர்.

## செந்துறை :

சங்கக் கூட்டம் 02–03–2025 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் நடைபெற்றது. சங்கச் செயலாளர் திரு. S. ஜெயராமன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நமது சங்க உறுப்பினர்கள் (i) திரு. இராதா பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. 'ஜெயலட்சுமி ஆச்சி' மறைவிற்கும் மற்றும் (ii) திரு. பூ. கொளஞ்சிநாதன் பிள்ளை – கலைச்செல்வி தம்பதியரின் மகள் செல்வி. 'கோகுலம் பிரியா' மறைவிற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

16–02–2025 அன்று செந்துறை LVV திருமண மண்டபத்தில் நடைபெற்ற தெய்வத்திரு. பாண்டியன் – நலமுடன் வளர்மதி தம்பதியரின் மகன் பூமி (எ) பாலகிருஷ்ணன் – பாரதி இவர்களது திருமணத்திற்கும், மற்றும் 26–02–2025 அன்று செந்துறை சோம. மங்களம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திரு. S. முத்துகுமார் – திருமதி. அருணா தம்பதியரின் மகள் ஒன்ஸ் கமலி – அருண்மொழி இவர்களது திருமணத்திற்கும் நமது சங்கத்தின் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

CREW அறக்கட்டளை மூலம் நமது சங்க உறுப்பினர்களின் மாணவ / மாணவியருக்கு 2024 – 25–ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கிய 'கார்குல வள்ளல்' திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

செந்துறை கார்காத்தார் சங்கத்திற்கு வாட்ஸ்அப் (WhatsApp) குழு ஆரம்பிக்கப்பட்டது. இக்குழு ஆரம்பிப்பதற்கு உதவி புரிந்த திரு. கார்த்திகேயன் அண்ணாமலை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர் படிவம் மற்றும் ஆண்டு சந்தா கொடுக்காதவர்கள் உடனடியாக கொடுக்குமாறு அன்புடன் வலியுறுத்தப்பட்டது.

இறுதியாக சங்கத்தின் துணைச்செயலாளர் திரு. சு. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிதே முடிவுற்றது.

- S. ஜெயராமன்,
செயலாளர்.

## குமராட்சி ஒன்றியம்

09–03–2025 அன்று கூடிய கலந்துரையாடல் கூட்டத்தில் சிதம்பரம் பகுதி மங்கல சந்திப்பு, தொடர்ச்சியாக நடத்தி வர நிரந்தர குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டவர்கள், கீழ்க்கண்ட பொறுப்புகளுக்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஆலோசகர்கள் : திரு. N. முருகன் பிள்ளை , திரு. A.G. சிவராமன் பிள்ளை, தலைவர்: திரு. K. குமார் பிள்ளை, துணைத்தலைவர் : திரு. D. புகழேந்தி பிள்ளை, செயலாளர் : திரு. K. பீகர் பிள்ளை, இணை செயலாளர் : திரு. K. சுந்தரரேசன் பிள்ளை, இணை செயலாளர் : திருமதி. R. திலகம், துணை செயலாளர்கள் : திரு. S. விவேக், திருமதி. சாந்தி சிவக்குமார், திரு. M. பாஸ்கர் பிள்ளை, பொருளாளர் : திரு. S. இராமச்சந்திரன் பிள்ளை.

மேலும் 16 செயற்குழு உறுப்பினர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

23–03–2025 அன்று சிதம்பரம் காசிமடம் தெரு, சிவகாமி அம்மை திருமண கலை அரங்கத்தில் மங்கல சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது. சுமார் 365 வரன்கள் பதிவு பெற்று பதிவேடுகள் வழங்கப்பட்டன. மகளிர் அணியினர் குத்து விளக்கு ஏற்றிட கடவுள் வாழ்த்துடன் பதிவேடுகளை சிதம்பரம் நகர கௌரவத் தலைவர் திரு. Prof., S. நடனசபாபதி பிள்ளை அவர்கள் வெளியிட்டார்கள். திரு. N. முருகன் பிள்ளை வரவேற்க, திரு. A.G. சிவராமன் பிள்ளை விளக்கவுரை மற்றும் நன்றியுரை ஆற்றினார்கள். விழாவினை திரு. வையூர் கோ. தியாகராஜன் தொகுத்து வழங்க திரு. V. செல்வநாராயணன் பிள்ளை, பரதூர் திரு. P.N. செல்வநாயகம் பிள்ளை மற்றும் R. ராஜாராமன் பிள்ளை வாழ்த்துரையுடன் விழா சிறப்பாக நடந்தேறியது. விழாவிற்கு வருகை புரிந்த சுமார் 700 க்கும் மேற்பட்டோருக்கு இனிய சுவையான உணவு வழங்கப்பட்டது.

- K. குமார் பிள்ளை, மங்கல சந்திப்பு குழுத் தலைவர்
Cell : 6380028887

## சீர்காழி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 1–3–25 அன்று தலைவர் திரு. கி. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மகளிர் தினம் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் கே. ரவிச்சந்திரன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

சீர்காழி நகர கார்காத்தார் சங்க தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில், சிவராத்திரி 3–ம் ஆண்டு ஆன்மீக பயணம் செய்வது என்று தீர்மானித்து, திருவையாறு மற்றும் அதை சுற்றியுள்ள சப்தஸ்தானங்கள் என அழைக்கப்படும் கோயில்களுக்கு 26–2–25 அன்று மதியம் 2.45 மணிக்கு புறப்பட்டோம். சீர்காழியை சேர்ந்த உறுப்பினர்கள் திரு. அகோரம் பிள்ளை, திரு. ரவிச்சந்திரன் பிள்ளை, திரு. சுகுந்தவனநாதன் பிள்ளை, திரு. சோமசேகர் பிள்ளை, திரு. பிரகாசம் பிள்ளை, கன்னியாகுடியை சேர்ந்த திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை, திருமதி. திலகவதி, உமா, சுதா, சுமதி மற்றும் தமிழரசி ஆகியோர் கலந்து கொண்டனர். சுவாமிமலை முருகனை தரிசித்து விட்டு சிவன் ஸ்தலங்களான வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு சென்று அங்கு நடைபெற்ற நாட்டியாஞ்சலி கண்டு களித்தோம். பின்னர் திருக்கண்டியூர், திருசோற்றுத்துறை, திருப்பூந்துருத்தி சென்றோம். பின்னர் திருக்காட்டுபள்ளி, திருக்கானூர் சென்றோம். அங்கு அதிகாலை 1.45 மணிக்கு 3–ம் கால பூசை தரிசித்து விட்டு, திருநெய்தானம் மற்றும் திருப்பெரும்புலியூர் கோயில்களில் வழிபட்டு 5.45 மணிக்கு சீர்காழி புறப்பட்டு 27–2–25 காலை சுமார் 8.00 மணிக்கு மனநிறைவோடு வீடு சென்றடைந்தோம்.

சீர்காழி சங்கத்தின் மகளிர் தினவிழா 8.3.25 அன்று வைதீஸ்வரன் கோயில் PKN திருமண மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. திருமதி. உமாதேவி கார்குல வாழ்த்து பாடல் பாடினார்கள். திருமதி. சுதா, திருமதி. R. சாந்தி, திருமதி. மலர்விழி, திருமதி. குமாரி மற்றும் திருமதி. B. சாந்தி குத்துவிளக்கு ஏற்றினார்கள்.

மகளிர் தின விழாவிற்கு திருமதி. சுஜாதா தலைமை வகிக்க, திருமதி. தீபா வரவேற்புரை கூறினார். குழந்தை செல்வங்கள் செல்வி. ஸ்ரீவதி, செல்வி. அட்சயா, செல்வி. பிருத்திகா கவிதைகள் மற்றும் மகளிர்தினம் பற்றி உரையாற்றினார்கள். குட்டீஸ் ஜெயஸ்ரீ அழகாக திருக்குறள் ஒப்பித்தார்.

சிறப்புரை திருமதி. மீனாட்சி பழனி ஓய்வு பெற்ற ஆசிரியை மற்றும் திருமதி. ஜெயந்தி முத்துக்குமார்

பேராசிரியை (தருமபுரம் கலைக்கல்லூரி) ஆகியோர் மகளிர் தினம் பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.

மகளிருக்கான போட்டிகளை திருமதி. விஜயலெட்சுமி நடத்தினார்கள். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. திருமதி. பிரவீனா நன்றி கூற நிகழ்ச்சியை திருமதி. சுமதி தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் மதிய உணவு வழங்கி உபசரிக்கப்பட்டது.

நீர் கொழுக்கட்டை மற்றும் கேழ்வரகு கஞ்சி வழங்கிய முன்னாள் மகளிரணி தலைவி திருமதி. வசந்திக்கும், திருமண மண்டபம் கொடுத்து உதவிய திரு. L. அசோகன் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

– சி. அகோரம், செயலாளர்.

## இளந்தோப்பு :

சங்க கூட்டம் மேனாள் தலைவர் S. சபாநாயகம் ஆசிரியர் அவர்கள் தலைமையில் 13–3–2025 அன்று சிவன் கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

பொருளாளர் தமது உரையில் சங்க ஆண்டு வசூல் செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுத்தார்கள். தலைவர் S.S. ராஜேந்திரன் மேனாள் தலைவர் S. செல்வநாயகம், மண்டல செயலாளர் S. சீனுவாசன், மற்றும் உறுப்பினர் T. இரவி சிறப்புரை ஆற்றினார்கள்.

2–3–2025 அன்று சிவன் கோவிலில் மாலை 5 மணிக்கு கார்குல உறுப்பினர்கள் நண்பர் கிழாய், பாலசுப்பிரமணியன் பிள்ளை அவர்களின் மகன் செல்வன் B. மாணிக்கத்திற்கும் தலைஞாயர் கார்குல உறுப்பினர் S. முத்து மகள் செல்வி. ஆர்த்திக்கும் திருமண நிச்சயதார்த்த விழா வெகு விமரிசையாக நடந்தது. அவ்வமயம் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு உறவினர்களையும், நண்பர்களையும் விருந்து உபச்சாரம் செய்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இளந்தோப்புதிருமதி.S.சுமதி அவர்களின்உடல் இருதய சிகிச்சைக்கு போதுமான நிதி உதவி அளித்த கார்காத்தார் சங்க தலைவர் சுரேஷ் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் இயற்றப்பெற்றது.

ஆண்டு சந்தாவை நிலுவையில் இருந்த தொகையைஒரேநாளில்வசூல்செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சிவன் கோவிலில் தொடர்ந்து பூஜைகள் நடைபெறுவதற்கு எல்லா நடவடிக்கையும் சங்க நிர்வாகிகளால் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

செயலாளர் தனது உரையில் சங்க உறுப்பினர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

திருமதி. S. சுமதி அவர்களின் உடல் நலம் பூரண நலம் பெற உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

2 மணி நேரம் நடைபெற்ற சிறப்புக் கூட்டம் இனிதே நன்றியுரையுடன் முடிவடைந்தது.

- V. இராஜசேகரன்,
செயலாளர்.
9444610907

## மயிலாடுதுறை

2025– ஆம் ஆண்டு மார்ச் மாத செயற்குழு கூட்டம் 02–03–2025 ஞாயிறு காலை திருமதி கார்குழலி ஞானசேகரன், இணைச் செயலர், மகளிரணி அவர்களின் இறைவணக்கத்துடன், திரு. தி. ரவிக்குமார், துணைத் தலைவர் அவர்களின் வரவேற்புரைக்கு பின் சி. தில்லைநாயகம் செயலர் கடந்த மாத அறிக்கையினை வாசித்திடவும் ந. முத்துகுமாரசாமி பொருளர் மூன்று இனங்களில் பராமரிக்கப்படும் சங்க வரவு செலவினை பதிவு செய்தார். வரவு செலவினம் கைத்தட்டலுடன் ஏற்கப்பட்டது. பின்னர் திருமதி. அகிலா ரெத்தினகுமார், மகளிரணி செயலர் மார்ச் 08–03–2025 ஆம் தேதி சங்க கட்டிடத்தில் உலக மகளிர் தினவிழா நிகழ்வுக்கு அனுமதியும் ஒத்துழைப்பும் பகல் தேநீர் மற்றும் மதிய உணவினை வழங்கிடவும் கேட்டுக்கொண்டார். பின்னர் மகளிர் தின நிகழ்ச்சிக்கு கட்டிடம் உணவும் வழங்கிட ஒத்துழைப்பு நல்கிட ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செயலர் தனது அறிக்கையில் 2024 – 2025 ஆம் கல்வி ஆண்டில் CREW அறக்கட்டளை மூலம் மாணவிகள் 102 பேர் பெற்ற உதவி தொகை 21,64,000/– என்று கூறி CREW அறக்கட்டளை தலைவர் அவர்களுக்கு நன்றியினையும் பாராட்டுகளையும் கைத்தட்டல் மூலம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் துணை தலைவர் சாப்பாடு கூடம் நாற்காலிகளை புதிதாக வாங்க கைபேசியின் மூலம் நன்கொடை வசூல் செய்ய அனுமதி கோரப்பட்டு செயற்குழுவில் அனுமதி வழங்கப்பட்டது. பிப்ரவரி 4–ஆம் தேதி சங்க கட்டிடத்தில் திருவாசகமுற்றோதல் நிகழ்வு மகளிரணியால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. அதற்கு உணவு மற்றும் உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றியினை திருமதி வசந்தி

பன்னீர்செல்வம் மகளிரணி பொருளர் தெரிவித்தார். கடந்த மாதத்தில் இயற்கை எய்திய நம் கார்குல சொந்தங்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி எழுந்து நின்று செய்யப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் இணைச்செயலர் சரவணன் அவர்களின் நன்றியுரையுடன் செயற்குழுக் கூட்டம் நிறைவுற்றது.

## மயிலாடுதுறை மகளிர் தின விழா

மகளிரணியினரால் ஏற்று நடத்தப்பட்ட "மகளிர் தின விழா" 8–3–2025 அன்று நகர கார்காத்த வேளாளர் சங்க கட்டிடத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மேனாள் தலைவி கோமதி ரத்னகுமார், இந்துமதி அன்பழகன் இருவரும் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தார்கள். தலைவி சுகுணாதேவி சபேசன் தலைமை தாங்கவும், செயலர் அகிலாண்டேஸ்வரி ரத்னகுமார் முன்னிலை வகிக்கவும், இணைச்செயலர் கார்குழலி ஞானசேகரன் இறைவணக்கம் பாட விழா இனிதே துவங்கியது. இணைச்செயலர் சுந்தரி கணேசன் வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார்கள்.

மேனாள் தலைவிகள் கோமதி ரத்னகுமார், அருள்மொழிசீனிவாசன்,நகரசங்கத்துணைத்தலைவர் ரவிக்குமார், மாநிலத் துணைத்தலைவர் சண்முகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். காலை நிகழ்வாக மகளிருக்கான பல்வேறு போட்டிகள் (தமிழோடு விளையாடு, குறுக்கெழுத்துப்போட்டி, ஊதுகாய் போட்டி, நடித்துக்காட்டுதல் போட்டி, நினைவாற்றல் போட்டி) நடைபெற்றது. நிகழ்ச்சிகளை காயத்ரி மோகன், அகிலாண்டேஸ்வரி தொகுத்து வழங்கினார்கள். காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற போட்டிகளில் மகளிர் அனைவரும் மிகவும் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் பங்கு பெற்றனர். ஒவ்வொரு போட்டியிலும் 50 முதல் 80 பேர் வரை கலந்து கொண்டனர்.

தேநீர், சத்தான சிற்றுண்டி மற்றும் மதிய உணவு நகர கார்காத்த சங்கத்தின் சார்பாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

மதிய நிகழ்ச்சிகள் சரியாக 2 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. Dr. V. முத்து அவர்கள் நமக்கு மூட்டுவலி வராமல் தடுக்க நாம் செய்ய வேண்டியது பற்றியும், அதற்கான யோகா மற்றும் உடற்பயிற்சிகள் பற்றியும் கூறினார்கள். Dr. வசந்தா ஜெயராமன் அவர்கள் யோக முத்திரைகள் மற்றும் அதன் பலன்கள் பற்றியும் விளக்கினார்கள். பிறகு சிறப்பு விருந்தினர்களை பொருளர் வசந்தி பன்னீர்செல்வம் அறிமுகப்படுத்தினார்கள். சிறப்பு விருந்தினர்களுக்கு மகளிரணி பொறுப்பாளர்கள் சால்வை அணிவித்தும், நினைவு பரிசு அளித்தும் மரியாதை செய்தனர்.

முதல் சிறப்பு விருந்தினர் திருமதி. பூங்குழலி அசோகன் ஊரக வளர்ச்சித் துறையில் உதவிப்பொறியாளராகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களது சேவையைப் பாராட்டி மயிலாடுதுறை கலெக்டர் அவர்கள் குடியரசு தினவிழாவில் விருது வழங்கி கௌரவித்தார்கள். அவர்கள் இவ்விழாவில் "நீங்களும் தொழில் முனைவோர் ஆகலாம்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றி நம் குலமகளிரை தொழில் முனைவோர் ஆக்குவது தான் தனது ஆசை என்று கூறினார்கள். அதற்கு தன்னால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்ய உறுதியளித்தார்கள். மகளிரின் சந்தேகங்களுக்கு பொறுமையாகவும், தெளிவாகவும் பதில் அளித்தார்கள். இவை தொழில் தொடங்க உள்ள மகளிருக்கு ஊக்கத்தையும், பெரும் நம்பிக்கையையும் கொடுத்தது.

அடுத்த சிறப்பு விருந்தினர் நுரையீரல் சிறப்பு மருத்துவர் Dr. ராதை பிரசன்னவதனம் அவர்கள் நம் நுரையீரலைப் பாதுகாப்பது எப்படி, நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் இருக்க நாம் செய்ய வேண்டியது எவை என்பன பற்றி தெளிவான, மிகவும் ஆழமான சிறப்புரை ஆற்றினார்கள். பின்னர் மகளிர் கேட்ட அனைத்து சந்தேகங்களுக்கும், தன் இனிமையான பதிலால் தெளிவுபடுத்தினார்கள்.

காலையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர் கைகளால் பரிசுகள் அளிக்கப்பட்டது. சுமார் 150–க்கும் மேற்பட்ட மகளிர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இறுதியில் துணைத்தலைவி விஜயா மதியரசன் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவடைந்தது. அனைத்து மகளிருக்கும் இந்த தினம் மிகவும் வித்தியாசமானதாகவும், மனமகிழ்ச்சியுடையதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தது. நகர கார்காத்த சங்க மேனாள், இந்நாள் பொறுப்பாளர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு அனைத்து உதவிகளையும் செய்தனர்.

– தில்லை நாயகம்,

செயலாளர்.

**98949 86545**

## செம்பனார் கோவில் :

சங்க கூட்டம் 06–03–2025 அன்று சங்க பொருளாளர் திரு. ம.சி. செல்வராஜ்தேவி அவர்கள் இல்லத்தில் துணைத்தலைவர் திரு. வீ. பாலாஜி அவர்கள் தலைமையில் மகளிர் சங்க உறுப்பினர், திருமதி.மீனலோசினிநடனம்அவர்கள்இறைவணக்கம் பாட பொருளாளர் திரு. ம.சி. செல்வராஜ் அவர்கள் வரவேற்புரை சென்ற மாத கூட்டறிக்கை வரவு – செலவு வாசித்திட கூட்டம் இனிதே தொடங்கியது.

மேலும் சங்க உறுப்பினர் திரு. A.M. சேகர் பிள்ளை அவர்கள் கணவன், மனைவி உறவு பற்றியும், உறவு மேம்பட எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் பேசினார்கள். திரு. மதியழகன் அவர்கள் தனது வாழ்க்கை வரலாற்றை பற்றியும், தனது வாழ்வில் முன்னேற்றத்திற்கு கார்காத்த வேளாளர் சங்கம் உதவியதை நன்றியுடன் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பகிர்ந்து கொண்டார்கள்.

முன்னாள் மண்டல தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் கூட்டம் நடத்திய இல்லத்தாரின் சிறப்புகளையும், உறவுகள் மேம்பட சகிப்புத்தன்மை வேண்டும் என்பதையும் மிகச் சிறப்பாக கூறினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் ஆண்களுக்கான பரிசையும், பெண்களுக்கான பரிசையும் இல்லத்தார் வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார்க்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் வழங்கிய இரவு விருந்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சங்க செயலர் திரு. ச. நெடுஞ்செழியன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கி. இராமநாதன், தலைவர்.

## பரசலூர் :

சங்க கூட்டம் 2–3–25 அன்று ஆனந்தபுரம் பேராசிரியர் V. சிவக்குமார் – சபீதா இல்லத்தில் திருமதி. சபீதா இறைவணக்கம் பாட திரு. V. சிவக்குமார் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் சென்ற மாத அறிக்கையையும், பொருளர் S.M. விஜய் பிள்ளை நிதிய அறிக்கையும் தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை மு.ஆ. நிதிய அறிக்கையையும் வாசிக்க நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள்.

சங்க உறுப்பினர் G. பாலசுப்பிரமணியன் பிள்ளை இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி சடங்குகளை பரசலூர் சங்க பொறுப்பாளர்கள் செய்தனர். மடப்புரம், செம்பனார் கோவில், மேமாத்தூர், வல்லம் சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது. சிறப்பு குலுக்கலுக்கான பரிசு முறையே ஆண்களுக்கான பரிசு M. விஜய்க்கும், பெண்களுக்கான பரிசு இராசாத்தி அம்மாளுக்கும் முறையே சிவக்குமார் பிள்ளை, சபீதா வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் சிவக்குமார் – சபீதாவிற்கு முறையே S. செந்தில்குமார், R. ஈஸ்வரி சால்வை அணிவித்தனர். சங்க உறுப்பினர் S. செந்தில்குமார் மனைவி அகிலாதேவியின் தாயாருமான தலைச்சங்காடு சங்க முன்னோடி திரு. C. கருணாநிதியின் மனைவியுமான திருமதி. ஜெயகாந்தம் இயற்கை எய்தியதற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இராஜ இராஜன் தெரு திரு. T. ராமலிங்கம் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்.

Cell : 9894960438

## மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 11–03–25–ம் தேதி அன்று சிவன் கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு துவங்கியது. தலைவர் திரு. G. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்க, திரு. T. கபிலன் செயலர் அவர்கள் அறிக்கை வாசிக்கவும், திரு. S. பரமநாதன் பொருளர் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். மணிக்கிராமம் கார்காத்தார் கிராம சமுதாய சங்கத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் திரு. S. தருமதுரை தலைவராகவும் திரு. G. மதிவாணன் செயலராகவும், திரு. G. அன்பழகன் பொருளராகவும் தேர்வு செய்யப்பட்டதற்கு சங்கத்தின் சார்பாக மண்டல துணைத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் வாழ்த்து தெரிவித்தார். இறுதியாக சங்க பொருளர் திரு. S. பரமநாதன் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே நடைபெற்றது.

– கோ. அன்பழகன்,

தலைவர்.

## மேலப்பெரும்பள்ளம்:

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு சங்க கூட்டம் 21–03–25 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசிய பின் சங்க நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

சித்திரை தமிழ் வருட பிறப்பிற்கு, சுத்த வாக்கிய பஞ்சாங்கம் வாங்கிடவும் ஒப்புதல் பெறப்பட்டு, நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– பால. இலட்சுமணன்,
தலைவர்.
**9443783743**

## 80. இராதாநல்லூர் :

சங்க கூட்டம் 9–3–2025 அன்று சங்க தலைவர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் இணை செயலர் காதி S.G. சந்தோஷ்குமார் B.E., அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மார்ச் 2025–ல் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. 80. இராதா நல்லூர் இராசுபிள்ளை குடும்ப வாரிசும் நமது சங்க செயலருமாகிய திரு. R.M.A. செல்வம் (எ) இராஜாமுத்தையா அவர்கள் சங்க உறுப்பினர்களுக்கு "விசுவா வசு" வருட பஞ்சாங்கம் வழங்கினார்கள். அன்னாருக்கும் இராசு பிள்ளை குடும்ப வாரிசுதாரர்களுக்கும் சங்க உறுப்பினர்கள் சார்பாக தலைவர் அவர்கள் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தார்கள். 2025 ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாதொகையினை சங்க உறுப்பினர்கள் பொருளாளர் திரு. M. சீனிவாசன் அவர்களிடம் அளிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மகளிர் அணி தலைவி திருமதி. S. சாவித்திரி அவர்களின் பேரனும், சங்க செயற்குழு உறுப்பினர் Er. S. சண்முகம் B.E., அவர்களின் சகோதரியின் மகனுமாகிய Dr. S. வருண்குமார் BDS அவர்கள் 2–3–2025 அன்று சென்னை அம்பத்தூர் – Redhills main Road ல் " DAZZLE DENTAL CARE" (Cell No : 8072467034) பல் மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது. சங்கம் தனது வாழ்த்தினை தெரிவித்துக்கொள்கிறது. சங்க செயற்குழு உறுப்பினர் Er. S. சண்முகம் B.E., அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமாரசாமி,
தலைவர்.
**9443645646**

## பூம்புகார் - மேலையூர் :

சங்க கூட்டம் 02–03–2025 அன்று திரு. M. பரணிதரன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

ஆன்மீக சுற்றுலா செல்வது பற்றி ஆலோசிக்கப்பட்டது. மாணவ – மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்க நிதி சேமிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த ஆண்டு உறுப்பினர் சந்தா செலுத்தாதவர்கள் கூடிய விரைவில் செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது. உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கிய திரு. M.S. இராஜேந்திரன் அவர்களுக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் திரு. B. சிவநேசன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- R. வெங்கடேசன், பொருளர்.
**8886467000**

## நெடுங்காடு

திரு. U. இராகவன் அவர்களின் மேல அன்னவாசல், இல்லத்தில் இல்லத்தலைவர் திரு. U. இராகவன் அவர்கள் தலைமை வகிக்க, K.S. கணபதி சுப்பிரமணியன் அவர்கள் இறைவணக்கம் பாடக்கூட்டம் இனிதே தொடங்கியது.

காரைக்கால் அருள்மிகு கைலாசநாதர் ஆலயத் தேருக்கு நமது சங்கப்பங்களிப்பாக ரூ. 11,000 இவ்வருடம் கும்பாபிஷேகம் நடக்கவிருப்பதால் தேர் திருவிழா நிறுத்தப்பட்டு, ஆலயத்தின் தனி அதிகாரி வேண்டுகோளின்படி கும்பாபிஷேகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட முடிவு செய்யப்பட்டது.

மண்டலச் செயலர் திரு. G. முத்துக்குமாரசாமி அவர்களின் அரசு பள்ளியிலிருந்து மாணவர்களைச் சுற்றுலாவிற்கு சென்னைக்கு அழைத்துச் சென்ற போது மாநிலத் தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்கள் காலைச் சிற்றுண்டியும் மாருதி நிறுவனர் திரு. ஆனந்தம் செல்வக்குமார் அவர்கள் மதிய உணவும் வழங்கியமைக்காக நமது சங்கத்தின் சார்பில் அவர்கள் இருவருக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் இயற்றப்பட்டது.

அடுத்த மாதக்கூட்டத்தில் பஞ்சாங்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**பரிசுக் குலுக்கலில் :** I - திரு. மோகன்தாஸ் அவர்கள் – கீழக்காசாக்குடி, II - திரு. குமார் – பழையாறு, III - திரு. C. பன்னீர்செல்வம் – வரிச்சிக்குடி பரிசு பெற்றனர்.

– திரு. S. ரெங்கநாதன், செயலாளர்.

## மூவலூர்

சங்க பாராட்டு கூட்டம் **23–3–2025** அன்று சங்க துணைத்தலைவர் திரு. B. கோவிந்தராசன் அவர்கள் இல்லத்தில் திரு. நடராஜ சுந்தரம் பிள்ளை அவர்கள் இறைவணக்கம் பாட துவக்கப்பட்டது.

சங்க தலைவர் திரு. S. ராஜ்குமார் அவர்கள் தலைமை ஏற்று பொருளாளர் திரு. மா.வெ. தமிழரசன் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. சங்க செயலாளர் திரு. G. குருமூர்த்தி அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையினையும் கூட்ட வரவு செலவு அறிக்கையையும் வாசித்தார்கள். கூட்டத்தின் முக்கிய நிகழ்வாக, சங்க உறுப்பினர் சித்தர்காடு திரு. T. அசோகன் அவர்களின் துணைவியார் திருமதி. T.R. பூங்குழலி உதவி செயற் பொறியாளர் / ஊராட்சி ஒன்றியம் மயிலாடுதுறை அவர்களுக்கு சிறந்த பணியினை பாராட்டி, வாழ்த்து மடல், பொன்னாடையும் அணிவித்து தலைவர் அவர்கள் பாராட்டி பேசினார்கள் பொருளாளர் அவர்கள் திருமதி. TR. பூங்குழலி அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்புறை ஆற்றினார்கள்.

திருமதி. T.R. பூங்குழலி பொறியாளர் (Civil) அவர்கள் தங்கள் ஏற்புரையில் கார்குல சொந்தங்களுக்கு தங்களால் இயன்ற உதவிகள் மற்றும் சொந்த தொழில் தொடங்க ஆலோசனைகள் வழங்குவதை கூறினார்கள்.

**2025 – 26** க்கான பஞ்சாங்கம் தலைவர் அவர்களால் வெளியிட்டு அதனை உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவரும் பெற்றுக் கொண்டனர்.

அடுத்து 'மனதின் குரல்' என்ற நிகழ்ச்சியினை, சங்க துணை பொதுச் செயலர் திரு. M. முருகானந்தம் அவர்கள் ஏற்பாடு செய்து நடத்தினார்கள். சிறிய ஆறு தலைப்புகளில் உறுப்பினர்கள் விருப்பம் உள்ள தலைப்பை பற்றி ஒரு சில வார்த்தைகள் பேசினார்கள். சிறப்பாக பேசிய திரு. M. கபிலன் அவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

சங்க ஆண்டு சந்தாவை ரூ. **250/–** ஆக உயர்த்தி அடுத்த **2026** முதல் நிர்ணயம் / வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இடம் மற்றும் மாலை சிற்றுண்டி வழங்கிய துணைத்தலைவர் திரு. B. கோவிந்தராசன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

G. குருமூர்த்தி, செயலாளர்.

## திருவிடைமருதூர் :

சங்கக் கூட்டம் 10–03–25 அன்று திருமாந்துறை வெள்ளாளர் தெரு, விநாயகர் கோவில் மண்டபத்தில் கிராமப் பெரியவர் திரு. C. நாகராஜன் அவர்கள் தலைமையில் திருவிடைமருதூர் மைய தலைவர் திரு. K. சுந்தர் மற்றும் திரு. G. பொற்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்க செயலர் திரு. க. பொற்செழியன் வரவேற்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் சங்க உறுப்பினர் சேர்க்கை மற்றும் சங்க எதிர்கால திட்டம் குறித்து பேசினார். கூட்டத்தில் திருவாவடுதுறை, திருவாலங்காடு, கெளுத்தூர், சூரியனார் கோவில், திருவிடைமருதூர் மற்றும் அம்மா சத்திரம் நகர் வாழ் நம் குல சொந்தங்கள் கலந்து கொண்டனர். ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்ற வகையில் மகளிர் அணியினர் திரளாக கலந்து கொண்டார்.

கூட்ட ஏற்பாடுகளை திருமாந்துறை திரு. T. செந்தில், திரு. A.V. பாபு மற்றும் திரு. R. மனோகர் ஆகியோர் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

மேலும் கூட்டத்தில் திருமாந்துறையில் வாழ்ந்து மறைந்த நம் முன்னோர்களின் வானின்று வாழ்த்துதல்களை பெற வேண்டி இரண்டு நிமிட மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.

திருமாந்துறை திரு. R. துரைராஜ் அவர்கள் வாழ்த்துரை கூறி வருகை புரிந்த அனைவர்க்கும் நன்றி கூறினார். எளிய தேநீர் விருந்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

அடுத்த கூட்டம் திருவாலங்காடு மற்றும் திருவாவடுதுறை நம் குல சொந்தங்கள் இணைந்து நடத்த தீர்மானிக்கப்பட்டது.

– க. பொற்செழியன்,
செயலர்.

## தஞ்சை

சங்க கூட்டம் **23–03–2025** அன்று சங்கத்தலைவர் திரு. S. ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கடவுள் வாழ்த்து திரு. K. தண்டாயுதபாணி பாட, உறுப்பினர்கள் அனைவரையும் தலைவர் வரவேற்று பேசினார்கள். செயலாளர் திரு. S. மதியழகன் **39–வது** ஆண்டு விழா மற்றும் **20–10–2024** தேதி **15–02–2025** அன்று நடைபெற்ற சங்க கூட்ட செயல்பாடுகளை வாசித்தார். கூட்டத்திற்கு சென்னையில் இருந்து வந்திருந்த திரு. M. மதிவாணன் அவர்கள் நமது சங்கத்தைப்பற்றியும், மகளிர் அமைப்பு இருப்பதைபற்றியும் பேசிய பிறகு, கார்காத்தார் தஞ்சையில் இளைஞர் அணி அமைப்பை ஆரம்பிக்க நன்கொடையாக ரூ. **5,000/–** வழங்கினார்கள். அவர்கள் தனது பணியில் ஓய்வு பெறும் வரை உகாண்டாவில் இருந்ததால், உகாண்டா நாட்டில் இருந்த மகளிர் உழைப்பைப்பற்றியும், அவர்களது பணித் திறன், கற்கும் திறனையும் தான் பெற்ற

இன்பங்களையும் எடுத்து உரைத்தார்கள். நன்கொடை வழங்கியதற்காக சங்கத்தின் சார்பாக செயலாளர் நன்றியினை தெரிவித்தார்கள்.

மகளிர் தின நிகழ்ச்சி திருமதி. R. லதா இராஜசேகர் மற்றும் திருமதி. V. காந்திமதி முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர் திருமதி. அ. பானுமதி அவர்கள் கலந்து கொண்டார்கள் (தலைமை ஆசிரியை ஓய்வு) பேசிய போது "மகளிர் உரிமை தினம்" தற்போது மகளிர் தினமாக மாறியுள்ளது என்றும் மகளிர் உரிமை தினம் தோன்றிய வரலாற்றினை சுருக்கமாக கூறினார்கள். மகளிருக்கு மட்டுமல்லாமல் நம் அனைவருக்கும் தேவைப்படும் 3– குணங்களான, நம்பிக்கை, பல வேலைகளையும் கற்றுக்கொள்ளுதல், தேவைப்படுவோருக்கு உதவுதல், போன்றவற்றை சிறு கதைகள் மூலமாக நயம்பட தெளிவுபடுத்தினார்கள். மேலும் நேர்மறை எண்ணங்கள் கொண்டு இருத்தல், எப்போதும் மகிழ்ச்சியாக இருத்தல், உடற்பயிற்சி மூலம் உள்ளத்தையும், உடலையும் நன்கு பராமரித்துக் கொள்ளுதல் அவசியம் என்றும்; இயற்கையாகவே ஆண், பெண் இருபாலரும் வெவ்வேறு உடல் மற்றும் மன அமைப்பு கொண்டவர்கள் என்றும் இரு பாலரும் இடையே உயர்வு, தாழ்வு இன்றி வாழ்தல் அவசியம் எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார்கள். பின்னர் மகளிர் தினம் குறித்து திருமதி. ப. சிவரஞ்சனி, மற்றும் திருமதி. சு. லதா இராசசேகர் அவர்கள் தனது தொழில் முன்னேற்றத்தில் அவர்களுடைய ஈடுபாடுகளையும் எடுத்துரைத்தார்கள்.

திரு. S. மோகன்குமார் அவர்களின் தம்பி திரு. S. குணசீலன் மறைவிற்கும் சங்க உறுப்பினர் திரு. S. அகோரம் (Modern Rice Mill) அவர்களின் மறைவிற்கு இரங்கல் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் திரு. S. ஜீவானந்தம் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

மதியழகன்,
செயலாளர்.

## மதுரை :

9–3–2025 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மதிப்புரு ஆலோசகர் இரா. கணேசன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். முனைவர் K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. துணைச்செயலாளர்கள் N. இராமலிங்கம் & S. சுந்தரராஜன் & செயற்குழு உறுப்பினர் R. பசுங்கிளி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நமது மூத்த சங்க உறுப்பினர் கூத்தியார்குண்டு தெய்வத்திரு. மாணிக்கம் பிள்ளை அவர்களின் மனைவி ஜெயா அவர்கள் மறைவுக்கு அவர் மகன் திரு. ரவி அவர்களின் இல்லத்திற்கு நமது சங்கம் சார்பாக தலைவர், பொருளாளர், முன்னாள் செயலாளர் நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள்.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. M. குமார் அவர்களின் இல்ல திருமண விழா (2–3–2025) அன்று தலைவர், பொருளாளர், செயலாளர் கலந்து கொண்டு சங்கம் சார்பாக வாழ்த்து மடல் வழங்கப்பட்டது.

நமது சங்கத்தின் நிதியை பெருக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டது. சங்க பொருளாளர் வழக்கறிஞர் S. முருகன் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன்,
செயலாளர்.
9443831474

## திருநெல்வேலி.

09–03–2025 அன்று கார்காத்தார் சங்க கட்டிடத்தில் கார்குல கர்ணன் வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் மகளிர் அணி தலைவி G. பத்மாவதி 5 விதமான விளையாட்டு போட்டிகள் நடத்தினார்கள். I, II, III வெற்றி பெற்றவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டனர். டீ, பிஸ்கட் கொடுக்கப்பட்டது. 10 மணி அளவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி G. பத்மாவதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மகளிர் அணி செயலர் R. சுப்புலட்சுமி அனைவரையும் வரவேற்றார்கள். சிறப்பு விருந்தினர் டாக்டர். K. அகிலாண்டபாரதி (கண் மருத்துவர், பேச்சாளர், எழுத்தாளர்) மகளிர் தின விழாவின் நோக்கம் மகளிர் முன்னேற்றம், உரிமை, மகளிர் கடமைகள் பற்றி விரிவாக எடுத்து கூறினார்கள். திருமதி. Dr. S. சுதா செல்வராஜ் (சங்கர் பாலிடெக்னிக் விரிவுரையாளர்) கல்வி, படிப்பு, சுதந்திரம், குடும்பத்திற்கும், நாட்டிற்கும் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி தெளிவாக எடுத்து கூறினார்கள். திருமதி. G. கோமா செல்லம் (விவேகானந்தா பள்ளி குழுமம் துணைத்தலைவர்) கல்வி உடல் ஆரோக்கியம், பெண்களின் கடமைகள், பெண்களின் முன்னேற்றம் பற்றி கூறினார்கள். M. மாலா (எ) மாரியம்மாள் ஆசிரியை, S. லதா மகேஸ்வரி, C. ஸ்ரீ ஜெயஸ்ரீ (சுந்தர வள்ளி வயது 70) சரண்யா லட்சுமி சீதகற்பநல்லூர் மல்லிகா கவிதை பாடினார்கள். விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பேச்சாளர்கள் அனைவரும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அம்பை சுதா நன்றி கூறி தேசிய கீதம் பாடி கூட்டம் இனிது முடிவடைந்தது. சுவையான மதிய உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

- R. சுப்புலட்சுமி,
மகளிர் அணி செயலர்,

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/4** செல்வி **S.V. பிரதிக்ஷா**<br>திருவோணம்<br>சாத்துடையான்<br>பூர்வீகம் : திருவாரூர்<br>விருப்பம் : தகுதியுள்ள மற்றும் சென்னை, ஐதராபாத், பெங்களூரில் பணிபுரியம் வரன். | 17.8.97<br>167 cm | MCA., B.Ed.<br>IBEC,<br>Windsor<br>Unirversity<br>(Pursing) | Indus International<br>IB School,<br>Hyderabad,<br>Rs. 12 Lakhs/PA | திரு. ச. வெங்கடேஸ்வரன்,<br>66, சாந்தி நகர்,<br>கூடலூர், மறைமலை நகர்,<br>செங்கல்பட்டு – 603 204.<br>Cell : 76679 99170, 81448 22170 |
| **B 2/4** செல்வி **சி. கிரிஜா**<br>மிருகசீரிஷம்<br>வில்வராய<br>பூர்வீகம் : நாகமங்கலம், அரியலூர் Dt. | 3.6.2000<br>155 cm | MBA,<br>Finance | Process Associate<br>Omega Healthcare,<br>Trichy.<br>Rs. 15,000/PM | திரு. பா. சிங்காரவேலு,<br>நாகமங்கலம்,<br>அரியலூர் Dt.<br>Cell : 97905 46609 |
| **B 3/4** செல்வி **R. புவனேஸ்வரி**<br>புனர்பூசம் 4ம் பாதம்<br>நெப்புகுட | 23.6.2001<br>5' - 6" | B.E.,<br>(Comp.) | Schnedider Electric<br>Bengalure<br>Rs. 40,000/PM | திரு. R. இராஜசேகரன்,<br>58, V.S.R. நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 96295 03222, 94427 80650 |
| **B 4/4** செல்வி **S. முத்துசண்முகபிரியா**<br>கேட்டை<br>தீபத்திரை | 12.4.2001 | B.Com.,<br>MBA | | திரு. M. சிவகுருநாதன், Ex. M.C.,<br>18, மேலப்பாளையம் நடுத் தெரு,<br>அம்பாசமுத்திரம்,<br>திருநெல்வேலி Dt.<br>Cell : 99659 18378 |
| **B 5/4** செல்வி **சி. வைசாலி**<br>உத்திராடம்<br>தில்லைபிரியன்<br>பூர்வீகம் : ஜெயங்கொண்டம் | 9.6.2001<br>152 cm | B.E. (CSE), | IBM<br>Rs. 10,00,000/PA | Dr. M. Jayasree,<br>Flat 1A, Archana Enclave, 5th Cross,<br>Jaya Nagar, Reddiar Palayam,<br>Pondicherry<br>Cell : 97898 54221, 70104 24369 |
| **B 6/4** செல்வி **M. ஹரிணி**<br>உத்திரட்டாதி<br>விளந்துட<br>பூர்வீகம் : கொத்தங்குடி | 28.11.98<br>152 cm | B.E.<br>(CSE) | Associate<br>Consultant,<br>Accenture,<br>Bangalore<br>Rs. 18,00,000/PA | திரு. K. முரளி,<br>52, இந்திரா நகர், 6வது தெரு,<br>மெடிக்கல் காலேஜ் ரோடு,<br>தஞ்சாவூர் – 613 0007.<br>Cell : 95973 22061, 94431 24261 |
| **B 7/4** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal<br>Medicine<br>M.D., | Sr. Resident<br>Doctor at a<br>Private Medical<br>College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/4** செல்வி **G. மகாலட்சுமி**<br>மகம்<br>கனகராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **15.11.95**<br>165 cm | B.E. (EEE) | Software Company | திரு. R. ஞானசம்மந்தம்,<br>No. 2, மின் நகர் மெயின் ரோடு,<br>இராமகிருஷ்ணா பள்ளி அருகில்,<br>சிதம்பரம்<br>Cell: **99769 97310, 8825 854226**<br>**90954 68213** (W) |
| **B 9/4** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை – 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்)<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன் | **21.11.98**<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer, Fresh Works Chennai | திரு. T. Ramesh,<br>D.No. 11, SNR Flats,<br>Viswanathapuram Main Road,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell : **90801 87596, 94445 56972** |
| **B 10/4** செல்வி **ம. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **7.5.98**<br>154 cm | B.Tech. (CSE) | Software Engineer<br>Epsilon<br>Bangalore<br>Rs. 12,00,000/PA | திரு. க. மணிகண்டன்,<br>5/2, காளமேகம் தெரு,<br>கிழக்கு தாம்பரம்,<br>சென்னை – **600 059.**<br>Cell : **99416 20355, 79041 97546, 94447 11045** |

## குருபாதம்







திருக்கயிலாயப் பரம்பரை தருமையாதீனக் குரு முதல்வர் அவதாரத் தலம் (இல்லம்), ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் நூதன விக்ரஹ பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக விழா அழைப்பிதழ் தமிழகத்தில் தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில், சுப்பிரமணிய பிள்ளை மற்றும் மீனாட்சியம்மை ஆகியோருக்கு அருந்தவ மகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர், தருமையாதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீகுருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் அவதரித்த இல்லத்தை நூதன ஆலயமாக எழுப்புவதற்கு தருமையாதீன 25 மற்றும் 26வது குருமணிகள் அருளாட்சிக் காலத்தில் பல முயற்சிகள் எடுக்கப்பெற்றது. தற்போது நானிலம் போற்றும் தருமை நட்சத்திரக் குருமணிகளின் அருளாட்சியில் குருவருளும் திருவருளும் கூட்டிவித்த வண்ணம், ஸ்ரீகுருஞான சம்பந்தரின் அவதார இல்லம் தானமாக தருமை ஆதீனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்அவதார இல்லத்தினை கற்கோவிலாக எழுப்ப மகாசந்நிதானம் திருவுள்ளம் கொண்டு திருப்பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. இதுபோது அவதார இல்லத்தில் ஸ்ரீகுருஞான சம்பந்தர் நூதன விக்ரஹம் பிரதி–ஷ்டை செய்து நிகழும் விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 5ந் தேதி 18.04.2025 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்குமேல் பிரதிஷ்டை விழா நடைபெறவுள்ளது. அனைவரும் வருக! குருவருள் பெறுக.

– V. முனியப்பன்

கோதாவிலாஸ் ஆப்செட் பிரிண்டர்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்.

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/4** செல்வன் **சிவசுப்ரமணியன். சி**<br>பூசம்<br>விழுப்பதரிய<br>பூர்வீகம் : வண்ணாங்குடிக்காடு, விருத்தாசலம்<br>விருப்பம் : நிரந்தர வேலை Any Degree (or) B.E.<br>Decent Salary | 27.5.2001<br>6' | B.E (CSE) | Software Developer<br>Zoho,<br>Palladam<br>Rs. 85,000/PM | திரு. க. சிவக்குமார்,<br>நெ. 2, திருவள்ளுவர் தெரு,<br>தில்லை நகர், விருத்தாசலம்,<br>கடலூர் மாவட்டம் – **606 001.**<br>Cell : **99542 10625** |
| **G 2/4** செல்வன் **V. கணேஷ்**<br>கேட்டை 4ம் பாதம்<br>தலவாருட | **12.3.96**<br>172 cm | B.E. (Mech) | Ramco Cements,<br>பெண்ணாடம்<br>Rs. 50,000/PM | திரு. R. ஐயப்பன்,<br>மகாத்மா காந்தி தெரு,<br>பெண்ணாடம், திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – **606 105.**<br>Cell :**99444 73052, 73731 79351** |
| **G 3/4** செல்வன் **ப. ஸ்ரீராம்**<br>ஆயில்யம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : வயலூர், பெரம்பலூர் மாவட்டம்<br>விருப்பம் : தகுந்த வரன் | **28.10.94**<br>170 cm | B.E. (CSC) | IT Analyst<br>TCS, Chennai<br>Rs. 6 Lakhs/PA | திருமதி. உமா பரஞ்ஜோதி,<br>5-A/84C,1A, ரோஸ் நகர்,<br>பெரம்பலூர் – **612 212.**<br>Cell : **97874 84028,**<br>**97505 29615** (W) |
| **G 4/4** செல்வன் **P. ராகுல்**<br>சுவாதி<br>கூடலுட<br>விருப்பம் : படித்து பணியில் உள்ள வரன் | **25.12.97**<br>179 cm | B.E.,<br>Mechitronics | Kone Elevator<br>India Pvt. Ltd.<br>Ambattur, Chennai<br>Rs. 7 Lakhs/PA | திரு. M. பாண்டியன்,<br>15/12, நரசிம்மன் தெரு,<br>மேற்கு மாம்பலம்,<br>சென்னை – **600 033.**<br>Cell : **89460 74541, 98418 31008** |
| **G 5/4** செல்வன் **S. தம்பிராஜன்**<br>உத்திரட்டாதி<br>வேளா<br>பூர்வீகம் : அகரஆலம்பாடி | **14.01.97**<br>178 cm | Dip. EEE | Purchase Engineer<br>CK Air Tech India<br>Pvt. Ltd.,<br>Rs. 25,000/PM | திரு. இரா. சக்திவேல்,<br>எண். **11**, ராமர் கோவில் தெரு,<br>ஓசூர் – **635 109.**<br>Cell : **98424 78238, 99552 458499**<br>E-mail : thambirajs14@gmail.com |
| **G 6/4** செல்வன் **S.A. பிரபாகரன்**<br>கேட்டை – 2ம் பாதம்<br>பங்களதரிய<br>பூர்வீகம் : பின்னலூர் (சிதம்பரம் வட்டம்) | **23.08.96**<br>170 cm | M.Tech<br>(Mechanical<br>CAD - CAM)<br>VIT-Chennai | L & T Technology<br>Services Ltd.,<br>Bangalore | திரு. மு. செந்திலதிபன்,<br>103, வாகீசன் நகர்,<br>பார்வதிபுரம்,<br>வடலூர் – **607 303.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **94449 03240, 94432 89639** |
| **G 7/4** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | **30.01.96**<br>180 cm | B.Tech<br>MBA | Java Developer<br>Hexaware<br>Technologies<br>Chennai<br>Rs. 50,000/PM | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : **94425 80571, 86108 73478** |



# வாழ்த்துகிறோம்



புதுச்சேரி மாநிலம் தெய்வதிரு. V. கோவிந்தராஜன் பிள்ளை – G. சங்கரநாயகி அம்மாள் (பெரிய கோட்டகம்) இவர்களின் மகளும் D. ஞானசேகரன் மனைவியுமான **G. சித்ரா, M.A., LLB,** SUB- INSPECTOR OF POLICE புதுவை மண்ணிற்கும் எங்கள் குடும்பத்திற்கும், நம் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் மூன்றாவது முறையாக காந்தி திடலில் நடைபெற்ற விழாவில் வீரமங்கை கேடையமும், பாராட்டு சான்றிதழும் புதுச்சேரி மேதகு **துணைநிலை ஆளுநர் குனியில் கைலாசநாதன்** அவர்களின் பொற்கரங்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து அவர் மேலும் பல வெற்றிகளையும், பதக்கமும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

திருமதி. D. **மங்கையர்கரசி அம்மாள்,** கொத்தவாசல்.

**D. ஞானசேகரன்,** M.A.,
M/s. மேகா பொதுவணிகம்
புதுச்சேரி

**G. சித்ரா** M.A., LLB
SUB. INSPECTOR OF POLICE
Incharge, CRB, DOG Squad
Computer Section, Photo Section
புதுச்சேரி.

**G.C. அரவிந்,** B.Tech
Senior Engineer,
RANE MADRAS Ltd., Chennai.

**G. மேகா** B.Tech., M.B.A.,
TCS, Siruseri,
Chennai.

மனதார வாழ்த்தும் என் மைத்துனர்

**G. வெற்றிவேந்தன்** – மீனாட்சி அம்மன் லாரி உரிமையாளர்,

**V. ரேவதி** – கண்ணன்குடி

**V. தீபன்** M.Sc., MIT., **V. அக்ஷயா** B.Com., புதுச்சேரி.

M/s. **மேகா பொதுவணிகம்,** புதுச்சேரி.

அலைபேசி : 9486367447, 8870738071, 9944529799

# மணமகன்/மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி ப. முத்துலெட்சுமி |
| படிப்பு | B.E. (Civil Engineering) |
| வேலை | Asst. Manager - ELV Designer,<br>Virtual Cloud Information Technology, LLC, Dubai,<br>Rs. 1,10,000/PM |
| பிறந்த தேதி | 15.07.1992 |
| உயரம் | 170 cm |
| நட்சத்திரம் | உத்திராடம் 2ம் பாதம் |
| கோத்திரம் | தென்னவராய |
| பூர்வீகம் | T. நெடுஞ்சேரி |
| தகப்பனார் | உ. பழனிவேல், TNSTC Driver (Retd.) |
| தாயார் | ப. தமிழரசி (கோடாலிகருப்பூர்) |
| முகவரி | 103, விளாகம் மெயின் ரோடு,<br>T. நெடுஞ்சேரி & PO, சிதம்பரம் Tk.,<br>கடலூர் Dt. - 608 305.<br>Cell : 82205 89035, 99428 57259,<br>80568 49029 (Whatsapp) |
| விருப்பம் | பொருத்தமான பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. பிரவின் |
| படிப்பு | B.E. (Mech.) M.B.A., |
| வேலை | Executive,<br>XYLOSUISSE Pvt. Ltd., Chennai<br>Rs. 6.5 Lakhs/PA |
| பிறந்த தேதி | 25.09.1996 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | சதயம் |
| கோத்திரம் | காருட |
| பூர்வீகம் | சூரியனார்கோவில் |
| தகப்பனார் | P. சூரியமூர்த்தி (Late) BSNL |
| தாயார் | K. அருணாதேவி (ஆசிரியை)<br>தலைச்சங்காடு |
| முகவரி | 16, முல்லைத் தெரு,<br>திருவள்ளுவர் நகர்,<br>மயிலாடுதுறை - 609 001.<br>Cell : (W) 915983 3308, 70101 75632<br>E-mail : praveenmaja96@gmail.com |
| விருப்பம் | பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள பொருத்தமான வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. பிரகாஷ் |
| படிப்பு | B.E. (Mechanical Engineering) |
| வேலை | Simpson Company,<br>Design Engineer, Asst. Manager<br>Chennai - 600 011.<br>Rs. 7 Lakhs/PA |
| பிறந்த தேதி | 18.04.1997 |
| உயரம் | 5' - 8" |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | சாத்தனுட |
| பூர்வீகம் | பெருந்தோட்டம், சீர்காழி வட்டம் |
| தகப்பனார் | S. செந்தில், B.Sc., |
| தாயார் | S. சுதா (கன்னியாகுடி) |
| முகவரி | No. 19/45, Bhavani Flats,<br>Second Floor, Flat No. 10,<br>Basha Street, Choolaimedu.<br>Chennai - 600 094.<br>Cell : 98409 09840 / 94445 70632 |
| விருப்பம் | படித்து பணியில் உள்ள வரன். |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் K.S. ஸ்ரீகிருஷ்ண ஆனந்த் |
| படிப்பு | M.B.B.S., M.D. (General Medicine) on going |
| வேலை | Rs. 5,00,000/- |
| பிறந்த தேதி | 01.09.1997 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | தென்னவராய |
| பூர்வீகம் | சிதம்பரம் |
| தகப்பனார் | K.செல்வகுமார் பேராசிரியர் (IT Dept.) அண்ணாமலை பல்கலைக்கழகம் |
| தாயார் | சங்கீதா (கோயமுத்தூர்) ASO, C3, அண்ணாமலை பல்கலைக்கழகம் |
| முகவரி | 82/60, புதுத் தெரு (மேற்கு), சிதம்பரம் - 608 001. Cell : 9443185363 E-mail : kskaucse@gmail.com |
| விருப்பம் | இணையான படித்த வரன் (அல்லது) வேலையில் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் Dr. சி. கிருபாகரன் |
| படிப்பு | MBBS., |
| வேலை | அரசு மருத்துவர் (Govt. Asst. Surgeon) |
| பிறந்த தேதி | 09.09.1995 |
| உயரம் | 163 cm |
| நட்சத்திரம் | பூரட்டாதி 2 ஆம் |
| கோத்திரம் | சாத்தனுட |
| பூர்வீகம் | வயலூர், பெரம்பலூர் மாவட்டம் |
| தகப்பனார் | சிவராமன், ஆசிரியர் ஓய்வு |
| தாயார் | அமுதா, தலைமை ஆசிரியை |
| முகவரி | 8/168, V.O.C. நகர், 2வது தெரு, வதிஷ்டபுரம் திட்டக்குடி - 606 106. கடலூர் Dt. Cell : 94420 68967, 94424 40459 |
| விருப்பம் | MBBS |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் N. BALAMURUGAN |
| படிப்பு | B.E., M.S. (IT) USA |
| வேலை | Data Scientist, Private, Phoenix, USA |
| பிறந்த தேதி | 02.06.1996 |
| உயரம் | 5' - 9" |
| நட்சத்திரம் | Kettai |
| கோத்திரம் | Vela |
| பூர்வீகம் | Puthuvilagam |
| தகப்பனார் | V. Natarajan, M.A., Deputy Registrar (Rtd.) Annamalai University |
| தாயார் | S. Valli, M.A., (Pinnalur) Assistant Registrar (Rtd.) Annamalai University |
| முகவரி | F9, Sugam Apartment, 15, North Car Street, Chidambaram - 608 001. Cell : 94434 26110 Email: natarajanau1961@gmail.com |
| விருப்பம் | Working in USA |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. ஹரிஷ் அரவிந்த் |
| படிப்பு | B.E. (Mechanical) |
| வேலை | Junior Assistant, Repco Bank, Tirupur, |
| பிறந்த தேதி | 15.09.1999 |
| உயரம் | 174 cm |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | சிக்கனகுடை |
| பூர்வீகம் | சங்கரன்கோவில் |
| தகப்பனார் | K. சிவகாமிநாதன் |
| தாயார் | செ. பார்வதி |
| முகவரி | 5/1288 B, விக்னேஸ்வரா அப்பார்ட்மெண்ட் எதிர்புறம், சங்கரன்கோவில் PIN - 627 756 Cell : 98420 72828, 98650 64447 |



# மணமகள்/மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் R. SAMBATH |
| படிப்பு | MBA (Finance) |
| வேலை | Executive at Crompton India Pvt. Ltd., Perambalur, Rs. 28,000/PM |
| பிறந்த தேதி | 26.12.1990 |
| உயரம் | 170cm |
| நட்சத்திரம் | Revathy 4 Patham |
| கோத்திரம் | Karudaiyan |
| பூர்வீகம் | Perambalur |
| தகப்பனார் | S. Ravichandran, Cashier at Petrol Bunk, Perambalur |
| தாயார் | R.Kalavathi, House Wife (Elaiyaperumalnallur, Jayamkondam) |
| முகவரி | 57/B, Venkatesapuram, Perambalur - 621 212. Cell : 88070 34632, 97519 29042 Whatsapp : 88070 34632 |
| விருப்பம் | Soft spoken girl and should take care of family like her family so do I. |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் கா. வருண் நேரு |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | Specialist - Software Engineering LTI Mindtree, Chennai Rs. 14.5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 22.11.1986 |
| உயரம் | 166 cm |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | எரவுட |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | மு. கார்த்திகேயன் |
| தாயார் | கா. தனலட்சுமி (செந்துறை) |
| முகவரி | 174/2, கொத்தட்டை ரோடு, இறையூர் – 606 111. கடலூர் மாவட்டம் Cell : 98844 91678 E-mail : dhanamkarthi76@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. ரவீன் குமார் |
| படிப்பு | M.Tech. VLSI Design |
| வேலை | Senior Design Verification Engineer Multicoreware inc / Uhnder inc. Rs. 23 Lakhs / PA |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175cm |
| நட்சத்திரம் | சதயம் 1ம் பாதம் |
| கோத்திரம் | கனகராய |
| பூர்வீகம் | திருநெல்வேலி |
| தகப்பனார் | A. சங்கர், Director of School Education (Retd.) |
| தாயார் | P. வசந்தி, Headmistress, Govt. Hrs. Sec. School (Retd.) |
| முகவரி | 28 & 29, VGN Highness, Vikramaditya Street, Srinivasapuram, Iyyappanthangal, Chennai - 600 056. Cell : 78459 14635, E-mail : raveenkumar2017@gmail.com |
| விருப்பம் | பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள பொருத்தமான வரன் |



| | |
|---|---|
| பெயர் | செல்வி சீ. ஜீவவர்த்தினி |
| படிப்பு | MBBS |
| பிறந்த தேதி | 19.04.1999 |
| உயரம் | 5' - 4" |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | வஞ்சினமுட |
| பூர்வீகம் | வஞ்சினபுரம், செந்துறை Tk. |
| தகப்பனார் | மு. சீனிவாசன், (சுய தொழில், சிங்கப்பூர்) |
| தாயார் | சீ. இந்துமதி |
| முகவரி | 1/51, நடுத் தெரு, வஞ்சினபுரம் அஞ்சல் - 621 714. செந்துறை தாலுக்கா, அரியலூர் மாவட்டம். Cell : 0065 94523029 0065 94501053 80568 49029 (Whatsapp) |
| விருப்பம் | மருத்துவ துறையில் மேற்படிப்பு படிக்கும் (அல்லது) அதே துறையில் பணியிலிருக்கும் வரன். |



# வாழ்க மணமக்கள்



மணமக்கள்

**R. சிவசங்கர்** B.E., **- R. ரம்யா** M.B.A.,

மணநாள்

**19-1-2025 ஞாயிறு, சிக்னேச்சர் திருமண மண்டபம்**, மயிலாடுதுறை

வரவேற்பு நாள்

**26-1-2025 ஞாயிறு**, **Hotel Hills,** HOSUR.

திருமண விழாவிலும், வரவேற்பு விழாவிலும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி விழாவினை சிறப்பித்த நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**S. ராமகிருஷ்ணன் பிள்ளை,**
**ஜெயந்தி ராமகிருஷ்ணன்,**
சிதம்பரம்.

**S. இராமலிங்கம் பிள்ளை,**
**கலா இராமலிங்கம்,**
ஓசூர்.

















# புதுச்சேரி மகளீர் தின விழா - 8.3.2025













# புதுச்சேரி மகளீர் தின விழா - 8.3.2025



# சதாபிஷேகம்



நல்லறத்துடன் இல்லறமும் கண்டு,
நற்மருத்துவப் பணியுடன் நல்விருந்தோம்பலும் கொண்டு,
நல்வழிகாட்டி தலைமுறைகள் பல தந்து,
நற்சமூகமாம் கார்காத்தார் குலம் புகழ வாழும் நல்இணையர்.

"திரு டாக்டர் **முத்து செல்வகணபதி,** திருமதி **வனஜா செல்வகணபதி**"

இவர்கள் 09.03.2025 அன்று மயிலாடுதுறை மாவட்டம் 'திருக்கடையூர்' "ஸ்ரீ அபிராமி அம்மன் உடனுறை ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர்" கோவிலில் கண்ட "மனமகிழ் சதாபிஷேகத்தில்" கலந்துகொண்டு சிறப்பித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி!

வாழ்வோம் வளமுடன் நலமுடன், நன்றி!!
நவில்தலில் மகிழும்,

| | | |
|---|---|---|
| **மா. சீனிவாசன்** | **செ. அருண்குமார்** | **செ. சிவகுமார்** |
| **சீ. வித்யா** | **அ. சாதனா** | **சி. கவிதா** |
| **சீ. பிரமோத்** | **அ. ஆராதனா** | **சி. கீர்த்தனா** |
| **சீ. வைபவி** | **அ. அபர்ணா** | |

# KBF Biz-Connect Karkathar Business Forum

## நடத்திய கார்குல மகளிர் தொழில்முனைவோர் சிறப்பு கூட்டம்

























மகளிர் தினத்தையொட்டி நம்குல மகளிர் தொழில்முனைவோர்களை சிறப்பிக்கும் விதமாக கார்குல தொழில்முனைவோர் பேரவை சிறப்பு நிகழ்ச்சியை கடந்த 30.03.25 அன்று பெருங்களத்தூர், **Shivali Hall** ல் நடத்தியது. தமிழகத்தில் சென்னை & பல ஊர்களில் இருந்து பெருந்திரளான மகளிர் தத்தம் பொருட்களுடன் வந்து காட்சிப்படுத்தினர். மாநிலத்தலைவர் திரு K.K.R.**சுரேஷ்** *(KKR Groups)* அவர்கள் தலைமையுரை வழங்க முன்னோடி மகளிர் தொழில்முனைவோரான திருமதி. மகாலட்சுமி சரவணன் ( நிறுவனர் , *Women Entrepreneurs India* ) அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். பல்வேறு சாதனைகளை படைத்த Chennai Radha Engineering Works M.D. திரு.V.R.**செந்தில்குமார்**, *IPL Products* திரு.**சண்முகவேலாயுதம்** & திறனுக்கப் பயிற்சியாளர் திருமதி.**உலகம்மாள்** சிறப்புரையாற்றினர். பல ஊர்களிலுமுள்ள நம் சங்க உறுப்பினர்கள் நேரில் வந்து சிறப்பித்தனர். **KBF Biz -Connect** அனைத்து பெண் தொழில்முனைவோர்களுக்கும் பாராட்டு சான்றிதழும், நினைவுப் பரிசும் வழங்கி கௌரவித்தது.

| M. பாலமுருகன் | N. பொன்னம்பலம் | V. கண்ணன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| 98404 08549 | 98408 97878 | 98413 01835 |

இங்ஙனம் : KBF செயற்குழு

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
15–05–1938

மறைவு :
28–04–2023

தெய்வத்திரு **M.S. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி டவுண்

*அமைதியின் உருவமாகவும்*
*பண்பின் இருப்பிடமாகவும்*
*பாசத்தின் உறைவிடமாகவும் இருந்து*
*தாங்கள் இந்த மண்ணுலகில் இருந்து மறைந்தாலும்*
*தங்கள் நினைவுகள் என்றும் எங்கள் இதயங்களில் இருந்து*
*மறைவதில்லை*

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**மகன்கள்**
திரு. **S. சோமசுந்தரம்,** திருச்சி
திரு. **M.S. லெட்சுமணன்,** திருச்சி
திரு. **S. பாலமுருகன்,** திருநெல்வேலி டவுண்
திரு. **S. சரவணன்,** மதுரை

**மருமகள்கள்**
திருமதி. **S. வடிவாம்பாள்**
திருமதி. **L. பிரசன்ன தேவி**
திருமதி. **B. கோமதி**
திருமதி. **S. ஸ்ரீசக்தி**

மற்றும்

**பெயரன்கள், பெயர்த்திகள், கொள்ளு பெயரன், பெயர்த்திகள்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. வ. இரத்தினசபாபதி

கார்குல விழதுகள் எல்லாம் வேரூன்றிவிட்டன என்று
காற்றோடு கலந்தனையோ
கற்று, உணர்ந்து, தெளிந்து
அடங்குதல் சான்றோற்கழகு என்றெண்ணி காற்றோடு கலந்தனையோ
உற்றார் உறவினர் எல்லோரும்
உன்னை போற்றுவர்
இரத்தினசபாபதியே சபேசன்
பாதகமலத்தில் நீவிர் மகிழ
போற்றுகின்றோம்
உம் பாதம் பணிகின்றோம்

– டாக்டர் இர.பழ.சுவாமிநாதன்

அன்பு மகள்கள் & மருமகன்கள்
**V. வாசுகி – S. வேணுகோபால்**
**M. கௌரி – M. முத்துகுமரன்**
**B. கோமதி – M. பாலசுப்ரமணியன்**

பேரன் – பேத்திகள்
**பிரசன்னா–மோனிகா, விஷ்ணு**
**சித்தார்த், ஸ்ருதி**
**ஆதித்யா, கவின்**

மற்றும் அன்பு சொந்தங்கள்

**S. சியாமளா, S. கார்த்திகேயன் – புவனேஸ்வரி, K. அர்விந்த் - Lisa, K. சிவா**
**S. சபாநாதன் – அனுராதா, S. தனுஸ்ரீ, S. ராகவ்**
**G. கோதை – R. கணபதி, G. உஷா – செந்தில், S. ஹரி**
**G. அருண், G. ஆண்டாள்**
**G. கணிக்கண்ணன் – K. யாழொலி, K. சௌமியா – விஷாத், கைரா**
**K. சரண்யா – அன்ட்வான்**
**M. சித்ரா – R. மருதவாணன், M. ஆனந்த் – காந்திமதி, அத்வைத்**
**M. விவேக் – வித்யா, அக்ஷரா, தியா**
**R. மல்லிகா – ராஜகோபால், R. ராம் – ஈசா டோரா, R. லஷ்மி – அலன்**
**M. லதா – முருகேசன்**

மற்றும்
**சுற்றமும் – நட்பும்**

# 22ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
17–4–1985

மறைவு
7–4–2003

## G. குமாரவேல் 1st B.D.S

(அண்ணாமலை நகர்)

திட்டக்குடி – 606 106.

தம்பி

உன் நினைவில் வாழ்கிறோம்.

உன்னை மீண்டும் பார்க்கும் நாள் வருமா.

# என்றும் உங்கள் நினைவில் வாழும்
# எங்கள் இதய தெய்வம்



தோற்றம் :
**19–05–1956**

மறைவு :
**28–01–2025**

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தாலுக்கா, சாத்துக்கூடல், தெய்வத்திரு. **S.A. அரங்கநாதன் பிள்ளை,** Deputy Dierctor of Education, M.A., B.Ed., **அர. மங்கையர்கரசி அம்மாள்** இவர்களின் மகனும், கடலூர் மாவட்டம் ராஜேந்திரபட்டினம் தெய்வத்திரு. சர்வலோகம் பிள்ளை S. காவேரி அம்மாள் இவர்களுடைய இளைய மருமகன்,

## Dr. R. தில்லை கோவிந்தன், B.V.Sc.,

அரசு கால்நடை மருத்துவர் (ஓய்வு) கோசலை – ஏகநாயகர் திருக்கோயில், விருத்தாசலம்

**திக்கெல்லாம் உங்கள்புகழ் விருதையின் விலாசம்**
**எக்காலமும் பெயர்யிருக்கும் சாத்துகூடல் கண்ட செம்மல்**
**எக்கணமும் பிரியா துணைவியார் மணிமேகலை**
**இக்கால விஞ்ஞானத்தில் (IT) பிள்ளையர்கள் பெருமைசேர்க்கும்**
**ஆடல் அரசர் தில்லையின் அருள்பெற்ற முல்லை சிரிப்போனே**
**ஆ(பசு) மடம் காத்த திரு. தில்லை கோவிந்தனே**
**அஞ்ஞானம் போக்குவதற்கு ஆற்றிவந்த சேவை**
**எஞ்ஞானமும் அழிவதற்கு இடமில்லை உங்கள்புகழ்**

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மனைவி. **T. மணிமேகலை தில்லை கோவிந்தன்**

மருமகன் : **R. சரவணன்** (Late)
Marine Engineer, Pondicherry
மகள் : **S. கலைவாணி,** M.C.A.,
பேத்தி : **S. அமிர்தா,**

மகன் : **T. கருணாகரன் (எ) சபரி,** M.C.A.
மருமகள் : **Dr. K. கவிதா,** M.D. (Siddha)
பேரன் : **K. தருண்பிரசாந்த்**
பேத்தி : **K. தர்ஷிகா**

மற்றும் **உறவினர்கள், நண்பர்கள்.**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி







மண்ணில் தோற்றம் :
29–5–1948

விண்ணில் மறைவு :
5–5–2021

## திருமதி. தங்கம் (எ) ஜெ. தங்கமணி

P.A. (ஓய்வு) தமிழ்நாடு காவல்துறை

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், விளத்தூர் கிராமம்,

தெய்வத்திருவாளர்கள். திருவேங்கடப் பிள்ளை – அலமேலு அம்மாள் அவர்களின்

மூத்த மருமகளும், எனது மனைவியுமாகிய,

தெய்வத்திருமதி. **தங்கம் [எ] ஜெ. தங்கமணி** அவர்களின்

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி நாள் : 5–5–2025.

என்றும் எங்கள் மனதில் தங்கள் நினைவுகளுடன் வாழும்

கணவர் : **தி. பிரபாகரன்**
செயலர் (ஓய்வு) சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி
செல் : 9487138643

மகள்கள் :
**லெட்சுமி பிரபா** – சிதம்பரம்.
**சூரியபிரபா** – சென்னை.

மருமகன்கள் :
**அன்பழகன்** – சிதம்பரம்.
**பாலமுருகன்** – சென்னை.

பேத்திகள் :
A. **தீபிகாராணி** – சிதம்பரம்.
A. **முகில்ராணி** – சிதம்பரம்.
B. **ஷராலி** – சென்னை.
B. **மிருணாளினி** – சென்னை.

## கார்குல கலாச்சார சங்கமம்

தொன்மையான பாரம்பரியமும் கலாச்சாரமும் கொண்ட நம் கார்குலத்தைப் போற்றி கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஆடி பௌர்ணமி அன்று கார்குல நாள் கொண்டாடுவதுடன், நமது உயர்ந்த கலாச்சாரத்தை வருங்கால தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில், நமது கார்குல மகளிர் அணி மற்றும் உறவுகள் இணைந்து, இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை (10–08–25) கோவில் நகராம் கும்பகோணத்தில் கொண்டாட ஏற்பாடு செய்து வருகிறோம். அது சமயம் மாணவர்களின் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, நடனப்போட்டி, etc. நடத்தி, அவர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில், இந்த விடுமுறையில் மே மாதம், அந்தந்த ஊர் மகளிர் அணியினர் அல்லது 3 அல்லது 4 கிராமங்கள் இணைந்து போட்டிகளை நேரிலோ, ஆன்லைனிலோ நடத்தி, முதல் இரண்டு இடங்களில் வந்தவர்களைத் தேர்வு செய்து விழாக் குழுவினருக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். மகளிர் அணி பொறுப்பாளர்கள் அனைவரும் இதற்கான முயற்சிகள் எடுப்பதுடன், விபரங்களைச் சேகரித்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

“குடிசெய்வல் என்னும் ஒருவருக்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்”

எனும் வள்ளுவன் வாக்கின்படி நமது இன ஆன்றோர்கள், சான்றோர்கள் அனைவரையும் துணை நிற்க அழைக்கிறோம்.

தங்களின் ஒத்துழைப்பை விழையும், விழாக்குழுவினர்

திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியன் 9842430060
திருமதி. சாந்தி சிவகுமார் 9942956305
திருமதி. மைதிலி வைத்தியநாதன் 9486260667
திருமதி. கலையரசி ராஜசேகரன் 9790841851
திருமதி. கோமதி ரத்னகுமார் 94438 75542
திருமதி. வனஜா இளங்கோவன் 6369291286

## கார்குல கலாச்சார விழா சங்கம போட்டிகள்

வரும் 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி, குடந்தையில் கொண்டாட இருக்கும் விழாவின் ஒரு பகுதியாக, குழந்தைகளுக்கான போட்டிகளை நடத்தி, இறுதி சுற்றில் வெற்றி பெறுபவர்கள், அவர்களின் திறமைதனை, மேடையில் அனைவர் முன்னிலையில் அரங்கேற்ற வேண்டும் என தீவிர எண்ணமும், ஆவலும் கொண்டுள்ளோம். அதற்கான போட்டிகள் கிளைச் சங்கங்கள் மூலம் அவரவர் பகுதியில் நேரிலோ, ஆன்லைனிலோ நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெறும் முதல் இருவர் இறுதிச் சுற்றில் மற்ற வெற்றியாளர்களுடன் பங்கேற்கும் தகுதி பெறுவர். (Online) இப்போட்டிகள் பள்ளி விடுமுறைக் காலமான மே மாதம் நடத்தலாம் என முடிவு செய்துள்ளோம்.

**பிரிவுகள் 5:**

**I Group** போட்டிகள் : **LKG to Std. II**

1) ஆத்திச் சூடி for LKG & UKG,
கொன்றை வேந்தன் for Std. I & II
2) கதை கூறுதல்: ஆங்கிலம் அல்லது தமிழ்
நல்லொழுக்க கதைகள் / Moral story
அல்லது
பக்தி கதைகள் / Religious story
3) பக்தி பாடல்

**II Group : Std III to V**

1) திருக்குறள் ஒப்புவித்தல்
2) கதை கூறுதல் : ஆங்கிலம் அல்லது தமிழ்
நல்லொழுக்க கதைகள் / Moral story
அல்லது
பக்தி கதைகள் / Religious story
3) பக்தி பாடல் அல்லது பாரதியார் பாடல்

**III Group : Std VI to VIII**

1) பேச்சுப் போட்டி (ஏதேனும் ஓர் தலைப்பில்)
கார்குல பண்புகள்/கார்குல வரலாறு/கார்குலச் செம்மல்களில் (யாரேனும் ஒருவர்)
2) சிவபுராணம் ஒப்புவித்தல்
3) பக்தி பாடல்கள் அல்லது பாரதியார் கண்ணன் பாடல்கள்.
4) கவிதைப் போட்டி : தலைப்பு கார்குலப் பெருமை / கார்குல விழாக்கள்

**IV Group : Std IX to XII**

1) பேச்சுப் போட்டி (ஏதேனும் ஓர் தலைப்பில்)
கார்குல பண்புகள்/கார்குல வரலாறு/கார்குலச் செம்மல்களில் (யாரேனும் ஒருவர்)
2) சிவபுராணம் ஒப்புவித்தல்
3) பக்தி பாடல்கள் அல்லது பாரதியார் நாட்டுப்பற்று பாடல்கள்.
4) கவிதைப் போட்டி : தலைப்பு கார்குலப் பெருமை / கார்குல விழாக்கள்

**V Group :** கல்லூரி மாணவ, மாணவிகள்

1) பேச்சுப் போட்டி (ஏதேனும் ஒரு தலைப்பில்)
கார்குல பண்புகள்/கார்குல வரலாறு/
கார்குலச் செம்மல்கள் (யாரேனும் ஒருவர்)
2) சிவஞானபோதம் ஒப்புவித்தல்
3) பக்தி பாடல்கள் அல்லது பாரதிதாசன் பாடல்கள்.
4) கவிதைப் போட்டி : தலைப்பு கார்குலப் பெருமை / கார்குல விழாக்கள்

### நடனப்போட்டி Group II to Group V

1) Classical Dance : பாரதநாட்டியம், கதக், குச்சிப்புடி etc.
2) Oriental Dance : Western, Cine Music, கிராமிய, குறத்தி நடனம் etc.

நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள் தங்கள் பகுதியில் உள்ள மகளிர் அணி பொறுப்பாளர்கள்.

வாழ்த்துக்களுடன்,
விழாக்குழுவினர்.



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

என்ன செய்யலாம் என்பது சாமர்த்தியம். எப்படிச் செய்யலாம் என்பது சாதுர்யம்

## நம்பிக்கையுடன் விழிப்புணர்வும் வேண்டும்

படிப்பு, அறிவு ஆற்றல் மட்டும் இருந்தால் போதாது. நிகழ்காலத்திற்கு ஏற்ப விழிப்புணர்வு வேண்டும். ஒருவன் எத்தனை திறமைகள் பெற்றிருந்தாலும், அது அவனுக்கு பயன்தராது போய்விடும். எனவேதான் பெரிய நிறுவனங்கள் வேலைக்கு மனுச் செய்திருப்பவர்களுக்கு (Presence of mind) நிகழ்காலத்திற்கேற்ப விழிப்புணர்வு இருக்கிறதா என பலவிதங்களில் சோதனை செய்கிறார்கள். தான்வயலின் வாசித்தால் பாலைவனத்தில் கூட மழைபெய்யச் செய்யமுடியும் என தனது வயலின் இசை மீது அசையாத நம்பிக்கை கொண்ட பெரிய வயலின் வித்வான் ஒருமுறை சர்க்கஸ் வேடிக்கை பார்க்கச் சென்றார்.அங்கே சர்க்கஸ் கலைஞர் வயலின் வாசிக்க கரடி டான்ஸ் ஆடியது.சர்க்கஸ் பார்க்க வந்திருந்தவர்கள் ஒட்டுமொத்தமாக எழுப்பியகோஷம் கூடாரத்தையே அதிரவைத்தது.இதனைப் பார்த்த நமது வயலின் வித்வான் சர்க்கஸ் கலைஞனை அணுகி நன்கு பழக்கப்பட்ட கரடியைத்தான் உன்வயலின் இசையால் ஆட வைக்கமுடியும்.ஆனால் என் வயலின் இசை எந்த மிருகத்தையும் நடனமாடவைக்கும் என்று கூறினார். சர்க்கஸ் கலைஞர் அதை பேத்தல் என மறுக்க இருவருக்குமிடையே அங்கே ஒரு போட்டியே ஆரம்பமானது.

சர்க்கஸ் கலைஞர் வயலின் வித்வான் முன் முதலில் ஒரு சிங்கத்தை அனுப்பினார்.வித்வான் இசைகேட்டு சிங்கம் சுழன்று சுழன்று ஆடத்தொடங்கியது.சர்க்கஸ் கலைஞர் அடுத்து ஒரு சிறுத்தையை அனுப்பினார்.அதுவும் வித்வான் வயலின் இசைக்குத் தன்னை மறந்து ஆடியது. அடுத்து ஒரு புலி வந்தது.வயலின் வித்வான் சற்றும் பதறாது தனது வயலினை வாசிக்கத் தொடங்கினார்.ஆனால் அந்த புலியோ இசைக்கு மயங்கவில்லை. வயலின் வித்வான் மீது பாய சீறிக்கொண்டு வந்தது. பார்வையாளர்கள் சப்தம் போட்டுக்கொண்டு ஓடினர். நமது வித்வானும் வயலினை காற்றில் பறக்க விட்டு விட்டு கடைசி நிமிடத்தில் தலை தெறிக்க ஓடி அதிஷ்டவசமாக புலியிடமிருந்து தப்பித்துக்கொண்டார்.சர்க்கஸ்காரர்களால் புலிகூண்டில் அடைக்கப்பட்டது. சற்று நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட வயலின் வித்வான் தோல்வியை ஒப்புக் கொண்டார்.சர்க்கஸ் கலைஞர் சிரித்தபடியே கூறினார். அது ஒரு செவிட்டுப் புலி. வேடிக்கை பார்க்கவந்த கூட்டத்தினர்கூட அப்புலிக்கு காது துவாரமும், ஏன்காது மடல்களுமே இல்லை என்பதை சில வினாடிகளுக்குள் கவனித்து தப்பிக்க முயன்றுவிட்டனர்.ஆனால் நீங்களோ உங்கள் வாசிப்பின் மீதுகொண்டிருந்த அபார நம்பிக்கையால் கண்திறந்து புலியை கவனிக்கத்தவறிவிட்டீர்கள்.

– சுவாமி சுகபோதனந்தா

**புதிர் :1.** உங்களிடம் மூன்று மாத்திரைகளைக் கொடுத்து மருத்துவர் ,அவற்றை அரைமணி நேரத்திற்கு ஒன்றாகச் சாப்பிடும்படிக் கூறுகிறார்.அப்படியானால் அந்த மாத்திரைகள் எவ்வளவு நேரத்துக்கு வரும் ?



**புதிர் :2.** ஒரு மணிநேரம் மட்டுமே. காக்டெய்ல் செர்ரி எனும் இப் புதிர் மிகவும் பிரசித்தமானது. புத்திசாலிகளே திணறிப்போய் இதற்கு விடைகிடையாது என கைவிட்டிருக்கிறார்கள். புதிர் மிக எளிது. நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் உள்ளவாறு காக்டெய்ல் கோப்பை வடிவில் வைக்கவேண்டும். உள்ளே ஒரு செர்ரி, ஆப்பிள, ஆரஞ்சு ஏதாவது ஒருபழம் இருக்கும். புதிர் என்னவெனில் இரண்டே இரண்டு தீக்குச்சிகளை மட்டும் இடம் மாற்றி வைக்க வேண்டும். பழம் வெளியே இருக்கவேண்டும். கோப்பையும் வடிவம் மாறக்கூடாது.



**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**

**வேண்டும் பனுவல் துணிவு**

நல்லொழுக்க நெறியில் நின்று உலகப்பற்றுகளை ஒழித்தவர்களின் பெருமையையே நூல்கள் சிறந்த பெருமையாக விரும்பிக்கூறும்.



**கோபம் ஏன் வருகிறது ?**

கோபம் என்பது உங்கள் பலவீனத்தின் அறிகுறி. நம்மை நாமே தாழ்த்திக்கொண்டு சிந்திக்கும் போது நம்மிடமிருந்து வெளிப்படும் எதிர்வினை ( Reaction ) தான் கோபம். கோபப்படுபவன் மிக சீக்கிரமாக மூப்படைவான். கோபம் குடியைக்கெடுக்கும். ஆத்திரம் அறிவுக்கு எதிரி என்பது தொன்று தொட்டு வரும்பழமொழி. மற்றவர் மீது நாம் கோபப்படும்போது, நிதானத்தை இழக்கின்றோம். ரத்தக்கொதிப்பு அதிகமாகிறது.கை கால் உதறுகிறது. எதிரி செய்த தவறை ஜீரணித்துக் கொள்ள முடியாது நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளும் தண்டனைதான் கோபம். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் வரும்போது, தோல்வி, பொருளாதார சிரமங்கள், குடும்ப உறவுகளில் ஏற்படும்விரிசல்கள் என பலகாரணங்கள் மனநிம்மதி கெடுவதற்குக் காரணங்களாகும். இவற்றால் ஏற்படும் விளைவு கடல் அலையைவிட மனிதனை அதிகம் பாதிக்கிறது. கோபத்தை தேவையானபோது கோபப்படுவது போல பயன்படுத்த வேண்டும். மற்ற நேரங்களில் கைக்குட்டைபோல மடித்து பைக்குள் வைத்துக் கொள்ளவேண்டும்.

**பல் பராமரிப்பிற்கு பத்து வழி முறைகள்**



1. காலையில் எழுந்தவுடன், இரவு படுக்கும் முன்பாக என இருவேளை பல்துலக்குங்கள்.ஒரு நிமிடத்திற்கு மேலாக அதிகமாக துலக்காதீர்கள்.
2. சாப்பிட்ட பின்னர் மவுத்வாஷ் கொண்டு வாயைக் கொப்பளித்து சுத்தம் செய்வது நல்லது.
3. பொதுவாக அனைவருமே மென்மையான பிரஷ் பயன்படுத்துங்கள்
4. இயற்கை மூலப் பொருட்களால்தயாரிக்கப்பட்ட( டியூப்களின் கீழ் பச்சை நிறப்பட்டை இருத்தல் ) பற்பசை பயன்படுத்துவது நல்லது.
5. புளோரி டேடட் பற்பசை பயன்படுத்துவது நல்லது.
6. பட்டாணி அளவு பற்பசை போதும்.விளம்பரங்களில் காட்டுவது போல ப்ரஷ் முழுவதும் நீளமாக எடுத்துக் கொள்வது தவறு.
7. முன் பின் வாக்கில் தேய்க்கக்கூடாது.பல் கூச்சம் உண்டாகும். சுழல்வாக்கில் மட்டுமே தேய்க்கவேண்டும்.
8. ஆறு மாதத்திற்கு ஒரு முறையேனும் உங்கள் பல் மருத்துவரிடம் சென்று சோதனை செய்து கொள்வது நல்லது.
9. சொத்தையினால் வரும் பற்சிதைவினை வலிவரும்வரை காத்திராது ஆரம்பத்திலேயே சோதனை செய்துகொள்வது நல்லது.
10. வாய் துற்நாற்றம் இருப்பின் மருத்துவரை உடனடியாக அணுகுங்கள்.

**காலண்டர் பற்றிய சுவையான செய்திகள்**

காலண்டர் என்பதற்கு நல்ல தமிழ் நாள்காட்டி என்பதே ஆகும்.காலண்டரில் ஒருதாள் கிழிந்ததென்றால் நம் வாழ்நாளில் ஒரு நாளை இழக்கிறோம் என்பதே பொருள்.திரு வள்ளுவப்பெருமானும் நாள் என ஒன்றுபோல்காட்டி என்பார்.கிருபானந்தவாரியாரும்ஒருமுறை தனது சொற்பொழிவின்போது காலன் (எமன்)நம் வாழ்நாளை டர் டர் எனக்கிழிப்பதால் காலண்டர் எனப்பெயர் வந்ததோ என நகைச்சுவையாகக்குறிப்பிட்டுள்ளார். பொதுவாக நடுஇரவிலிருந்துதான்நாள் ஆரம்பமாகும். ஆனால் பாபிலோனியர்கள் சூரிய உதயத்திலிருந்துதான் நாளை கணக்கிடுகின்றனர்.யூதர்கள் சூரிய அஸ்தமனத்திலிருந்துதான் கணக்கிடுகின்றனர்.மேலும் ஒருசெய்தி யூதர்களுடைய புதுவருடம் வெள்ளி, புதன் அன்று துவங்காது. மேலும் காலண்டர் பற்றிய சுவையான செய்திகள். எத்தியோப்பியர்களின் காலண்டரில் ஆண்டுக்கு 13 மாதங்கள் இருக்கும்.அதில் 30 நாட்கள் கொண்ட 12 மாதங்களும்,5 நாட்கள்கொண்ட 13வது மாதமும் இருக்கும்.திபெத் நாட்டினர் 13 என்ற தேதி துரதிஷ்டம் தருமென்பதாக நம்புவதால் அவர்கள் காலண்டரில் 13 என்ற தேதி இருக்காது.12,14,14,15 என்றுதான் இருக்கும்.

– எஸ்.மோகன் குமார்,தஞ்சாவூர்

**உழைப்பு! உழைப்பு!**

வெற்றி என்பதற்கு வேறுபெயரும் உண்டு.அதுதான் உழைப்பு! உழைப்பு மட்டும்தான் உங்களை மற்றவர்களிடமிருந்து பளீரென வேறுபடுத்திக் காட்டுவது. அதுமட்டும்தான் மகிழ்ச்சி எனும் உணர்வுக்கு உங்களை அடையாளம்காட்டி அமைதி என்கிற உணர்விடம் உங்கள் பெயரை சிபாரிசு செய்யும்!

## மேலும் தெரிந்து கொள்ளுங்கள்

| | |
|---|---|
| 1. இந்தியாவின் முதல் சூப்பர் கம்ப்யூட்டரின் பெயர் | பரம் |
| 2.இந்திய ராணுவ அகாடமி உள்ள இடம் | டேராடூன். |
| 3.கிரகங்களில் மிகப்பெரியது | ஜூபீட்டர். |
| 4.அமெரிக்கக்குடியரசின் சின்னம் | யானை. |
| 5.உலோகங்களில் மிகவும் லேசானது | லிதியம். |
| 6.பல்பின் உள் எரியும் உலோகக்கம்பி | டங்ஸ்டன். |
| 7.செஞ்சிலுவைச்சங்கத்தின் தலைமையகம் | ஜெனிவா. |
| 8.கங்கை உற்பத்தியாகும் இடம் | கோமுகம். |
| 9.கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியர் | லார்டு சின்ஹா. |
| 10.சந்திரனில் மனிதன் இறங்கிய கலத்தின் பெயர் | ஈகிள். |
| 11.ஆங்கில எழுத்துக்களில் அதிகம் பயன்படுவது | E |
| 12.ஒளி புகக்கூடிய உலோகம் | மைக்கா. |
| 13.அதிக நாட்கள் அடைகாக்கும் பறவை அல்பெட்ராஸ் | 80 நாட்கள். |

## வாழ்க்கையில் வெற்றி

வாழ்க்கையில்வெற்றிபெற்றயாரின்சரித்திரத்தைவேண்டுமானாலும்பாருங்கள்!படிப்புஇல்லாமல்,பணம் இல்லாமல், ஏன் கை, கால் கூட இல்லாமல்வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் உண்டு! சாதித்தவர்களும்உண்டு .ஆனால் தன்னம்பிக்கை இல்லாமல்வெற்றி பெற்றவர்கள்என்று யாருமே இல்லை.

தி.ஜெயலெட்சுமி,தஞ்சாவூர்

## விடுமுறையில் குழந்தைகளுக்கு....








1. ஊரில் இருக்கும் தாத்தா,பாட்டி வீட்டிற்கு அழைத்துச்சென்று அவர்களின் எளிய வாழ்க்கையைக்காண வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள்.
2. சமையல் அறையில் அம்மாவுக்கு உதவியாக காய்கறி நறுக்குதல், சமைத்தல் போன்றவற்றில் உதவி செய்ய பழக்குங்கள்.
3. தோட்டத்தில் அல்லது தொட்டியில் செடிகளை வளர்க்கச்செய்து தினசரி தண்ணீர்விட்டு பராமரிக்க ஊக்குவிக்கலாம்.
4. கை யெழுத்தை மேம்படுத்த தினமும் அரைமணி நேரம் பயிற்சி கொடுக்கலாம்.
5. வங்கிக்கு அழைத்துச் சென்று வங்கியில் பணம் போடுதல்,எடுத்தல் ஆகியவற்றைக் கற்றுத்தரலாம்.
6. வீட்டு மளிகை சாமான்கள் பட்ஜெட் போடக் கற்றுக்கொடுக்கலாம்.
7. முதலுதவி பயிற்சி கொடுப்பது குழுந்தைகளுக்கு வாழ்நாள் முழுமைக்கும் பயனுள்ளதாக இருக்கும்.
8. ரத்த தானம் செய்யுமிடத்திற்கு அழைத்துச்சென்று ரத்ததானம் செய்யும் அவசியத்தை எடுத்துக்கூறுங்கள்.அவர்கள் முன்பாக இரத்ததானம் செய்து முன்னுதாரணமாகவும் இருக்கலாம்.
9. அருகிலுள்ள கோவில்களுக்கு அழைத்துச்சென்று எல்லா மதமும் போதிப்பது அன்பு ஒன்றைத்தான். என்பதை புரியவையுங்கள்.

## சற்று சிரிக்கலாமா ?

1. திருடனுக்கும் போலீசுக்கும் என்ன வித்தியாசம் ?
   யூனிபார்ம்.
2. சிஸ்ட்டர் ஆப்பரேஷன் எவ்வளவு நேரம் நடக்கும் ?
   அது நீங்க ஆஸ்பத்திரிக்குக் கட்டற பணத்தைப் பொறுத்தது .
3. உங்க பையன் தினமும் டிவி பார்ப்பானா ? "ஏன் சார் ?"
   வகுப்புல எந்தக்கேள்வி கேட்டாலும்; பதில் சில நிமிடங்களில் அப்படின்னு சொல்றான்!
4. உங்க வீட்டு நாயோட வாலை ஏன் நறுக்கிட்டீங்க ?
   பின்ன என்ன ? எஜமானன் என்கிட்டேயே அது வாலாட்டுது.
5. தலைவரை அரஸ்ட் பண்ணிட்டாங்களாமே ? ஏன் ?
   கள்ள ஓட்டு போட ஆட்கள் தேவைன்னு பேப்பர்ல விளம்பரம் கொடுத்திருக்காராம்!
6. 2025 எப்படிங்க இருக்கும் ?
   இரண்டுக்கும் சைபருக்கும் பின்னாடி இரண்டு அஞ்சுண்ணு இருக்கும்.

## மாவீரன் உணர்த்திய பாடங்கள் :



முப்பத்து மூன்று வயதில் உலகையே வென்ற மாவீரன் அலெக்ஸாண்டரால் தனக்கு வந்த நோயை வெல்லமுடியவில்லை.நோயின் வேதனை அவனுக்கு உணர்த்திய பாடங்களை செய்தியாக உலக மக்களுக்கு விட்டுச்சென்றான். தனது படைத் தளபதிகளை அழைத்து தனது மரணத்திற்குப்பின் செய்யவேண்டியவைகளாகக்கூறியவை.......

1. வாழ்வு நிலையானதல்ல. நடப்பது நடந்தே தீரும். எந்த மருத்துவராலும் இறைவன் எழுதிய தலைவிதியை மாற்ற முடியாது. மருத்துவர்களே என் சவப்பெட்டியைத் தூக்கிச்செல்லவேண்டும்.

2. வாழ்நாள் முழுவதுமாக ஓடியாடி சம்பாதித்த பொக்கிஷங்களை எடுத்துச்செல்லமுடியாது. அவ்வளவு முயற்சியும், பேராசையும் வீண். எனவே எனது செல்வங்கள் அனைத்தையும் எனது கல்லறைமீது இரைத்துவிடுங்கள்.

3. தாய் என்னை ஈன்றபோது வெறும் கைகளுடன்தான் பிறந்தேன். உயிர் பிரிந்து சவமாகச் செல்லும்போதும் வெறும்கையுடன்தான் போகப்போகிறேன்.இதை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.எனவே சவப்பெட்டியின் வெளியே எனது கைகளைத் தொங்கவிடுங்கள். அது ஆடிக்கொண்டேசெல்லட்டும் என்று அந்த மாவீரன் கட்டளையிட்டான்.

## திட்டமிடுங்கள்.

திட்டமெல்லாம் போட்டு வாழ்க்கையை நடத்தமுடியாது என்று வறட்டு வேதாந்தம் பேசிக்கொண்டிருந்த ஒருவன் படகில் போய்க்கொண்டிருந்தான்.குளிர்ந்த காற்று பறவைகளின் ஒலி கேட்டு தன்னை மறந்த நிலையில் நீரின்போக்கிலேயே படகை போகவிட்டான்.எதிரில்வருவதையோ, படகு எங்கேபோகிறது என்பதையோ , போகும் பாதையையோ கவனியாது செல்வது அவனுக்குப் பிடித்திருந்தது.அதனால் துடுப்புக்கு வேலையே இல்லை.அதாவது தனது உழைப்பு ஏதும் இல்லாது தானாகவே போகும் படகில் பயணம் செய்து கொண்டிருந்தது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.கொஞ்ச நேரம் ஆனது ...காற்று கொஞ்சம் பலமாக வீச படகும் வேகமாகப் போனது.சோம்பேறிக்கு சந்தோஷத்தில் தலை கால் புரிவில்லை. பயணம் வேகமாகிவிட இவனுக்கு சந்தோஷம். ஆரவாரம் செய்தான். கொஞ்ச நேரமானது ! தூரத்தில் ஏதோ ஹோவென ஒரு ஓசை கேட்க ஆரம்பித்தது ! இயற்கை இசைபாடுகிறது என மேலும் மகிழ்ந்தான்.படகு நிலைதடுமாறி திடீரென சரிய ஆரம்பித்தபோதுதான்,ஒரு நீர்வீழ்ச்சி வழியே தான் அதல பாதாளத்துக்குப் போய் கொண்டிருப்பதையும் அதுதான் நயகராவீழ்ச்சி என்பதையும், அதில் தான் வீழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தான்.சோம்பேறி மரணபயத்தோடு துடுப்பை எடுத்துப் படகின் திசையை மாற்றப் பார்த்தபோது,நேரம் கடந்துவிட்டது,துடுப்புக்கு அங்கே பயனில்லை.நீர்வீழ்ச்சியில் வீழ்வதை அவனால் தடுக்கமுடியவில்லை !திட்டமிடாத வாழ்க்கையும் இவ்வாறுதான். திட்டமிடுவோம் மகிழ்வுடன் வாழ்வோம் !

## எடை வேறுபாடு எப்படி ?

ஒரு பறவையின் இறகும் ஒரு கிலோ எடைகொண்ட பொருளும் ஒரு உயர்ந்த கட்டிடத்தின் மேலிருந்து விழும்போது இரண்டுமே ஒரே நேரத்தில் தரையை வந்தடைகின்றது, பூமி அனைத்து பொருட்களையும் (எடைவேறுபாடின்றி) தன்னைநோக்கி இழுக்கிறது என்பதை உறுதிப்படுத்த விரும்பிய கலிலியோ என்ற இத்தாலியைச் சேர்ந்த விஞ்ஞானி 350 ஆண்டுகளுக்கு முன்பாகவே புகழ்பெற்ற பைசாகோபுரத்தின் மீதிருந்து இந்த பரிசோதனையைச் செய்தார். எடைகுறைவான அதே நேரம் எடை அதிகமான இரு பொருட்களையும் காற்றற்ற ஒரு வெற்றிடத்தில் விடுவிக்கும்போது இரண்டுமே ஒரே நேரத்தில் தரையை வந்தடைகிறது என்றும் பொதுவாக காற்று உள்ள இடத்திலேயே நாம் இருப்பதால் இதில் அவ்வளவாக கவனம் கொள்வதில்லை என்பதையும் உறுதிசெய்துள்ளார்.



**புதிர்விடை:** 1. ஒரு மணிநேரம் மட்டுமே

**புதிர்விடை : 2.** இரண்டு தீக்குச்சிகளை மட்டும் நகர்த்தியதில் செர்ரி பழம் வெளியே வந்து கிண்ணம் கவிழ்ந்து விட்டது. ஆனால் கோப்பை வடிவம் மாறவில்லை.

# தாயே ! ! தமிழே !

(திருச்சிராப்பள்ளி 'பைந்தமிழியக்கம் நடத்திய கூட்டத்தில் 28–2–2025 அன்று வாசித்த கவிதை)

அன்னைத் தமிழே !
ஆருயிர் மொழியே !
அன்பு மகன் வணக்கம் !

நித்தமும் மறவாது
நின்னைத் தொழுதிட
நிறைமாந்தர் நட்பினில்
நெஞ்சம் களிக்கிறேன் !

காலத்தால் மூத்தவளே !
கன்னித் தமிழாய்
பூத்தவளே !

உனக்கான
மொழிப்போரில்
இன்னுயிரையும் ஈந்து
வெற்றியை
ஈட்டித் தந்த
தமிழர் பூமியில்

வீர மங்கைகளாக
வேலு நாச்சியார்களாக
தமிழை உயர்த்திப் பிடித்து,
தமிழறிஞர்களைப் போற்றி
முழக்கமிட்டு

இங்கே
அமர்ந்திருக்கும்
மாதர்குலத்
திலகங்களைப்
பார் அன்னையே !

கல்லூரி மாணவியரெல்லாம்
கன்னித் தமிழ் காக்கும்
படை முன்னவராய்
அணி வகுக்கும்
காட்சியைப் பார் !

இந்த மன்றத்தின்
'மாணவர் அரங்கில்'
அவர்கள் முழக்கமிட்ட
தமிழின் வீரம் பார் !

வள்ளுவன் மூலம்
வான் புகழ்
''குறள்'' தந்தவளே !

தொல் காப்பியனை
இலக்கணம்
படைக்க வைத்தாயே !

நல் காப்பியமாய்
நானும் தமிழில்
புதுமை படைக்க
வரம் வேண்டுகிறேன் தாயே !

புண்ணிய பூமியின்
புகழ் மணக்க
அந்நிய மண்ணிலும்
'இருக்கை அமைத்து'
அலங்காரமாய்
வீற்றிருப்பவளே !

என்னில் நிறைந்து
துணை நிற்கும்
எழில் தமிழே !

உன்னில் கரைந்து
உலகோர் போற்ற
'கவிதை மொழி'
வேண்டுகிறேன் தாயே !

ஞானப் பாலூட்டி
'அப்பரை'
'தேவாரம்'
பாட வைத்தாயே !

நாவினில்
'அகரம்' தீட்டி
காளிதாசனைக்
'கவி' ஆக்கினாயே !
'மகாகவி' ஆக்கினாயே !

சேக்கிழார்
''பெரிய புராணம்'' பாட
'உலகெலாம்' என
அடி எடுத்துத் தந்தவளே !

பிள்ளைத் தமிழ்
பாடுகிறேன் தாயே !

உன் பிள்ளை
தமிழ்
பாடுகிறேன் தாயே !

இந் நானிலம்
பயனுறு வகையில்
பாடல்களை
நானும் யாத்திட

போதிய தமிழ்தந்து
எனையும்
போற்றி அருள்வாய் நீயே !

தாயே வணக்கம் !
தமிழே வணக்கம் !

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
9578286891

# தவணை முறை விற்பனை

## HIRE PURCHASE

மேலையூர் ச.அன்பழகன் 98413 73184

ஒரு பொருளின் மொத்த விலையையும் ஒரே நேரத்தில் கொடுக்காமல் பல தவணைகளாகக் கொடுத்து பொருளின் உரிமையைப் பெறுவதைத்தான் தவணை முறை விற்பனை என்கிறோம் . இது ஒன்றும் நம் தாய்மார்களுக்குப் புதியது அல்ல. அந்தக் காலங்களிலிருந்தே தெருவில் வரும் புடவைக் காரார் மற்றும் பாத்திரக்காரரிடம் தவணை முறையில் புடவை மற்றும் பாத்திரங்கள் வாங்கியுள்ளார்கள். தற்கால இளைஞர்கள் கார் மற்றும் கணினி போன்ற பொருட்களை தவணை முறையில் வாங்குகிறார்கள் . அந்தத்தவணை முறை அதற்குண்டான சட்டம் தவணை முறையில் விற்பவர் உரிமை வாங்குபவர் கடமை போன்ற வைகளைப் பற்றி இப்போது பார்ப்போம் சட்டம் பற்றி எழுதிக் கொண்டிருந்தவர் ஏன் இப்போது வியாபாரம் பற்றி எழுதுகிறார் என்று யோசிக்க வேண்டாம் இதுவும் ஒரு வகை சட்டத்தின் கீழ் தான் வருகிறது அதனைப் பற்றி சற்று பார்ப்போம்.

**தவணை முறை என்றால் என்ன ?**

ஒரு பொருளுக்குண்டான விலையை கொஞ்சம் கொஞ்சமாக பல தவணைகளில் அந்தப் பொருளின் விலை முழுவதும் கொடுக்கப்படும் வரை கொடுத்து உரிமை ஆக்கிக்கொள்வதே தவணை முறை எனப்படும். இதில் தவணையில் பொருள் வாங்குபவர் குறிப்பிட்ட தவணைகளில் பெரும்பாலும் மாதாந்திரத் தவணை ஒரு குறிப்பிட்ட தொகையை பொருள் விலையின் அசல் மற்றும் வட்டிக்காகக் குறிப்பிட்ட காலம் வரை பொருளின் முழு விலையும் கொடுக்கப்படும் வரை கொடுப்பதாக ஒப்புக் கொண்டு பொருளைப் பெறுவார். பொருளை அவ்வாறு தவணையில் கொடுக்கும் விற்பனையாளருக்கு அப்பொருளின் முழு விலையும் உடனே கிடைக்காவிட்டாலும் இதரப் பொருள்களை மொத்த மற்றும் சில்லறை விற்பனையில் கொடுப்பதன் மூலமும் கிடைக்கும். தவணை முறையில் பொருளை வாங்கியவர் வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் கடன் மூலம் அப்பொருளைவாங்கினாரானால் அப்பொருளின் முழு விலையையும் அந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் கொடுத்து விடும் தவணை முறை ஒப்பந்தப்பத்திரம் ஏறத்தாழ குத்தகைப் பத்திரம் மாதிரிதான்.

**தவணை முறை விற்பனயின் தோற்றம்**

இந்த மாதிரி தவணை முறை விற்பனை என்பது 19 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தான் வளர்ச்சி பெற்றது. விலை உயர்ந்த பொருட்களை வாங்க விரும்பும் வாடிக்கை யாளர்களிடம் பணம் குறைவாக இருந்தால் அவர்கள் அப்பொருளை வாங்குவது தள்ளிப் போகும் அல்லது வாங்காமலே விட்டு விடுவார்கள் உதாரணமாக ஒருவரால் ஒரு பொருளின் மொத்த விலையையும் ஒரே முறையில் கொடுக்க இயலாமல் அந்த விலையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தொகையை முன் பணமாகக் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தால் இந்த தவணை முறை ஒப்பந்தம் அவரை அந்தப் பொருளை மாத வாடகையில் எடுத்துச் செல்ல அனுமதிக்கும். அவர் எப்போது அந்தப் பொருளின் முழு விலையையும் அதற்குண்டான வட்டியையும் தவணை முறையில் கட்டி முடிக்கிறாரோ அப்போது அப்பொருளை வாங்கிக் கொள்ளலாமா அல்லது பொருளைத் திருப்பிக் கொடுத்து விடலாமா வாடகைக்குத் தானே எடுத்திருந்தார் என்று முடிவு செய்து கொள்ளலாம்.

அவ்வாறு தவணை முறையில் பொருளை வாங்கியவர் தவணைத் தொகையைக் கட்டத் தவறினால் பொருளை விற்றவர் அப்பொருளைத் திரும்ப எடுத்துக் கொள்வார். பாதுகாப்பில்லாத தவணை முறையில் விற்பனையாளருக்குப் போதிய பாதுகாப்பு இருக்காது ஆனால் தவணை முறை விற்பனை , அதன் விலை பரவலாகப் பிரித்துக் கொடுக்கப்படுவதால் வாங்குபவருக்கு சௌகரியமாக இருக்கும்.

**விற்பவரும் உரிமையளரும்**

பொருளை விற்பவர் போதிய பொருளாதார வசதி உடையவராக இருந்தால் அவரே நேரடியாக பொருளை தவணை முறையில் விற்று விடலாம் அதாவது கடனுக்கு விற்பது போல் அது சட்ட பூர்வமானதும் கூட. அதனால் சில நேரங்களில் பொருளின் உரிமையாளரும் விற்பனையாளரும் ஒரே நபராக இருப்பார்கள் ஆனால் பெரும்பாலான விற்பனையாளர்கள் பொருளை விற்றால் உடனே பணம் வரவேண்டும் என்ற எண்ணம் உடையவராக இருப்பார்கள் அப்படிப்பட்ட உரிமையாளர் / விற்பனையாளர் அதனை தவணை முறையில் பொருள் வாங்க நிதி உதவி செய்ய முன் வரும் வங்கி அல்லது நிதி நிறுவனத்துக்கு உரிமையை மாற்றிக் கொடுத்து பொருளின் முழு விலையையும் அவர்கள் பெற்றுக் கொண்டு விடுவார்கள்.

**சம்பந்தப்பட்ட சட்டம்**

பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930 Sale of Goods Act 1930 மற்றும் இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 Indian Contract Act 1872 போன்ற சட்டங்களுக்கும் தவணை முறைச் சட்டத்துக்கும் தொடர்பு இருந்தாலும் இது தவணை முறைச் சட்டம் 1972 கீழ் தான் வருகிறது. இந்த தவணை முறைச் சட்டம் 1972 Hire Purchase Act 1972 என்பது 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் தேதி நிறை வேற்றப்பட்ட போதிலும் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்துதான் நடை முறைக்கு வந்தது . 6 பகுதிகளையும் 31 பிரிவுகளையும் கொண்ட இந்த தவணை முறைச் சட்டத்தின் பகுதி 2 ல் பிரிவுகள் 3 4 தவணை முறை ஒப்பந்தங்கள்

உடன்படிக்கைகள் எழுத்து மூலம் இருக்க வேண்டும் என்பதையும் அந்த உடன் படிக்கையில் என்னென்ன இடம் பெற வேண்டும் என்பதையும் கூறுகிறது.

பகுதி 4 ல் பிரிவுகள் 9– 17 தவணை முறையில் பொருள் வாங்குபவரின் உரிமைகளும் கடமைகளும் கூறப்படுகின்றன. அதே போல் பகுதி 5 ல் பிரிவு 18 –23 பொருளின் உடமையாளரின் உரிமைகளும் பொறுப்புக்களும் கூறப்படுகின்றன.

**தவணை முறை விற்பனையின் முக்கிய அம்சங்கள்**

" ஒரு பொருளை தவணை முறையில் வாங்குபவர் அப் பொருளைப் பயன் படுத்துவதற்கான வாடகை அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலம் வரை தவணைகளாகக் கொடுக்கப்படுகிறது.

" அவ்வாறு கொடுக்கப்படும் வாடகை அந்தப் பொருளைத் தவணைக்கு எடுத்ததற்கான கட்டணமாகக் கருதப்படும். அதன் பொருள் தவணையில் வாங்கியவர் ஏதேனும் தவணைத் தொகையைச் செலுத்தத் தவறினால் பொருளை விற்றவர் அதனை திரும்ப எடுத்துச் செல்ல அவருக்கு உரிமை உண்டு.

" பொருளை விற்பவர் மற்றும் தவணை முறையில் வாங்குபவர் இருவருக்கும் இடையே தேவைப்படும் அனைத்து நிபந்தனைகளும்தவணை முறை உடன் படிக்கை என்னும் ஒப்பந்தத்தில் எழுதப்படும்.

" தவணைத் தொகை ஆண்டுத் தவணை, அரை ஆண்டு காலாண்டு அல்லது மாதத்தவணை இவற்றில் அந்த ஒப்பந்தத்தில் என்ன கண்டுள்ளதோ அந்தத் தவணையாக இருக்கும்.

" இருவருக்கும் இடையிலான ஒப்பந்தம் கையெழுத்தான உடனேயே அந்தப் பொருள் வாங்குபவருக்குக் கொடுக்கப்பட்டு விடும்.

" அப்பொருளை வாங்கி விட அவர் முடிவு எடுத்தால் கடைசித் தவணைத் தொகையை அவர் கட்டி முடித்ததும் அவர் வசம் ஒப்படைக்கப்படும்.

" ஒரு வேளை அதனை அவர் வாங்க விரும்ப வில்லையானால் எப்போது வேண்டுமானாலும் அதனைத் திருப்பிக் கொடுத்து விடலாம் அதற்கு பின்னர் அவர் தவணைத் தொகை செலுத்தத் தேவையில்லை.

" அவ்வாறு அவர் அப்பொருளைத் திருப்பிக் கொடுத்து விட்டால் அது வரை அவர் கட்டியத் தவணைத் தொகை அப்பொருளை அது வரை வைத்திருந்தற்கான கட்டணம் என்பதால் அதனைத் திரும்பத் தரக் கேட்க முடியாது.

" கடைசித் தவணைத்தொகைக் கட்டும் வரை தவணையில் அதனை வாங்கியவர் உரிமையாளராக முடியாது. ஆதலால் அந்த தவணைக் காலத்தில் அவர் அப்பொருளை அடமானம் காட்டவோ விற்கவோ செய்யக்கூடாது.

" உடன்படிக்கை கையெழுத்தாகும் போது தவணையில் பொருள் வாங்குபவர் ஒரு குறிப்பிட்ட தொகையை ஆரம்ப வைப்புத் தொகையாகக் கொடுப்பது வழக்கம்.

" தவணையில் பொருள் வாங்கியவர் எல்லா தவணைத் தொகையையும் செலுத்தி முடிக்கும் வரை அவரும் விற்பவரும் எழுதிக் கொண்ட உடன்படிகையை முடிக்க முடியாது.

**தவணை முறை விற்பனையில் உள்ள நன்மைகள்**

தவணை முறையில் வாங்குபவரைப் பொறுத்தவரை முழு தொகையையும் கொடுக்கும் முன்பாகவே பொருள் அவர் பயன் பாட்டுக்கு வந்து விடுகிறது.

தவணை முறையில் பொருளின் விலை கொடுக்கப்படுவதால் அதிக விலையுள்ள பொருட்களைக் கூட வாங்க முடிகிறது.

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தொகையை மட்டுமே செலுத்த வேண்டியுள்ளதாலும் இதர செலவுகள் முன் கூட்டியே தெரிவதாலும் வரவு செலவை சரி கட்ட முடிகிறது.

பொருளை வாங்கித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம்இல்லாததால் பொருளின் மதிப்பு குறைந்தால் என்ன செய்வது என அச்சப்படத் தேவை இல்லை

தவணையில் வாங்கியவர் கட்டிய வட்டித் தொகைக்கு வருமானவரி விலக்குக் கோரலாம்.

**நன்மை அல்லாதவை**

தவணைத் தொகை முழுமையும் கட்டி முடிக்கும் போது பார்த்தால் பொருளின் விலையை விட அதிகமாகக் கொடுத்திருப்பது தெரிய வரும்.

நீண்ட நாட்களுக்கு வாடகை மாதிரி தவணைத் தொகை செலுத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

பூராத் தொகையையும் கட்டி முடிக்கப்பட்ட பிறகு தான் பொருளுக்கு உரிமை கொண்டாட முடியும்.

உடன்படிக்கையில் வேறு ஏதேனும் நிபந்தனைகள் சேர்க்கப்பட்டிருந்தால் விலை மேலும் அதிகரிக்கக்கூடும். தவணை முடியும் காலத்தில். அப்போதைய வணிகத்துக்கு அப்பொருள் தேவைப் படாமல் இருந்தால் அதுவரை கட்டியது வீண் என நினைக்கத் தோன்றும்.

தவணை முறையில் வாங்க நிதி உதவி செலவு சற்று கூடுதலாக இருக்கும்.

தொடரும்...

## வருந்துகிறோம்

அண்ணா நகர் கார்காத்த வேளாளர் சங்க ஆயுட்கால உறுப்பினர் கேப்டன் டாக்டர். ந. ராமசுப்பு (இயக்குனர் மருத்துவ பணிகள்: ஓய்வு) 04–03–2025 அன்று லண்டனில் காலமானார் அவருடைய இறுதிச் சடங்குகள் 16–03–2025 அன்று கொரட்டூர் அவரது இல்லத்தில் நடைப்பெற்றது.

## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் :** ஆண்டாள், கௌரி, சித்ரா, மீனா, பிரியா, மீரா, காந்திமதி, தீபிகா.

**இடம் :** காந்தி சிலை, மெரினா கடற்கரை.

தோழிகள் அனைவரும் மாலை 5 மணி அளவில் மெரினா கடற்கரையில் கூடி கதைக்க ஆரம்பிக்கின்றனர்.

கௌரி : அதற்குள் சூரிய தேவன் அவனது உக்கிரத்தைக் காட்ட தொடங்கிவிட்டான். 5 மணிங்கிறதாலே சமாளிக்க முடியுது. ஆண்டாளக்கா இன்றைய கச்சேரியைத் துவங்கலாமா ?

சித்ரா : தொடங்கறதுக்கு முன்னாடி நான் கொண்டு வந்திருக்கிற ஜில் ரோஸ்மில்க் குடிச்சிட்டு ஆரம்பிப்போம். எல்லோரும் எடுத்துக்கோங்கப்பா !

பிரியா : ஆண்டாளக்கா! இந்த மாத பண்டிகைகள் சொல்லுங்க !

ஆண்டாள் : எவ்வளவு சீக்கிரமாக நாட்கள் ஓடுது ! போன வருடமும் எல்லாப் பண்டிகைகளையும் பற்றி பேசி விட்டோம். அதனால detail ஆக வேண்டாம். எல்லோருக்கும் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள் ! ஏப்ரல் 13–ஆம் தேதி குரோதி வருடம் முடிந்து ஏப்ரல் 14 அன்று ஸ்ரீவிசுவாவசு பிறக்கிறது. புத்தாண்டு அன்று அறுசுவை உணவு படைத்து உண்போம். ஏப்ரல் 6–ஆம் தேதி ராமநவமி வருகிறது. இப்போல்லாம் நிறைய கோயில்ல ராமநவமி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மீரா : ராமனாக அவதரித்ததின் நோக்கம் என்ன என்று தெரியுமா ? ஒரு புத்தகத்தில் படித்தேன், சொல்றேன் கேளுங்க ! சகோதர ஒற்றுமை, தந்தை சொல் மீறாமை, ஒருவனுக்கு ஒருத்தி, மருமகளை மாமியார் நடத்த வேண்டிய முறை உள்ளிட்ட குடும்ப உறவுகளைப் பற்றி நமக்கு தெரியப்படுத்துவதற்காகவே இந்த அவதாரம். மேலும் பூலோகத்தில் உள்ள பல ரிஷிகளுக்கு தரிசனம் தருவதற்காக மனிதனாக அவதரித்தாராம்.

காந்திமதி : காஞ்சிபுரத்தில் பச்சை வண்ணப்பெருமாள் கோவிலில் மரீசி முனிவருக்கு ராமனாக நின்ற கோலத்தில் இறைவன் காட்சிதர, ஆதிசேஷன் தன் மீதும் வழக்கம் போல் அமர வேண்டும் என வேண்ட, இறைவன் தன்னைத் தீபமாக மாற்றிக்கொண்டு ஆதிசேஷனின் தலையில் ஒளிர, இதை நாகதீபம் என்கிறார்கள்.

ஆண்டாள் : சித்ரா பௌர்ணமி இந்த வருடம் மே மாதம் 12–ஆம் தேதி வருகிறது. இந்திரனை வழிபடும் தினம் மேலும் அன்று தான் மதுரையில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குவார்.

தீபிகா : மே மாதம் 11–ஆம் தேதி உலக அன்னையர் தினம் கொண்டாடப்படும், என் குழந்தைகள் மறக்காமல் அன்று வாழ்த்துவார்கள். அதில் எனக்கு ஒரு மகிழ்ச்சிதான்.

சித்ரா : அது சரி ஏன் இன்னைக்கு வசுமதியும், கோமதியும் வரலை ?

மீனா : குழந்தைகளுக்கு Exam நடப்பதால் அவர்களால் வர முடியாதென Phone பண்ணிவிட்டார்கள். சரி ! உங்களில் யாருக்காவது India full form தெரியுமா ? சொல்லுங்கள் பார்க்கலாம்.

அனைவரும் : என்னப்பா இந்தியாவுக்கு full form ன்னு கேட்கிற ?

மீனா : இந்த கேள்வியை U.S. ல் பல இந்தியகளிடம் கேட்ட போது பதில் தெரியலையாம். ஒரு பாகிஸ்தானி "Independemt Nation Declared in August" என பதிலளித்தாராம்.

கௌரி : இந்த ஆண்டு ஐந்து ஆஸ்கார் விருதுகள் அனோரா எனும் திரைப்படத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் இயக்குநர் ஷான் பேக்கர், இப்படத்தின் இயக்குநர், சிறந்த திரைக்கதை, சிறந்த படத்தொகுப்பு, சிறந்த திரைப்படம், சிறந்த நடிகையாக மிக்கி மேடிசன் என 5 விருதுகளை அள்ளிச் சென்றுள்ளது. இதற்கு முன் 1953–ஆம் ஆண்டு வால்ட் டிஸ்னி நான்கு விருதுகளைப் பெற்றுள்ளார். இஸ்ரேல் பாலஸ்தீன ஆவணப்படமான No other Land ஆஸ்கார் விருதினைப் பெற்றுள்ளது.

பிரியா : உத்தரபிரதேசத்திலுள்ள திரிவேணி சங்கமத்தில் நடந்த கும்பமேளாவில் 65 கோடி மக்கள் நீராடி உள்ளனராம். பிரயாகையைச் சுத்தம் செய்ய இன்னும் பல நாட்களாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டாள் : கங்கா, யமுனா, சரஸ்வதி நதி கூடும் இடம் தானே திரிவேணி சங்கமம். ரொம்ப வருஷத்துக்கு முன்னே போயிருக்கேன். அப்பல்லாம் இவ்வளவு கூட்டம் இல்லை.

சித்ரா : சரஸ்வதி நதின்னு நீங்க சொன்னதும் ஒரு செய்தி எனக்கு நினைவு வருது. சரஸ்வதி நதி சட்லெஜுக்கும் யமுனைக்கும் இடையில் ஓடியதை நாசாவின் செயற்கைக் கோள் உறுதிப்படுத்தி உள்ளது. அந்நதி 2500 ஆண்டுகளுக்கு முன் வற்றி இருக்கலாமென கணிக்கப்படுகிறது.

பிரியா : நானும் படித்தேன். சரஸ்வதி நதி சோம்நாத் அருகில் கடலில் கலப்பதை, காளிதாசர் குமார சம்பவம் நூலில் எழுதி உள்ளார். மகாபாரதத்தில் பலராமன் சரஸ்வதி நதிக்கரையில் வாழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கௌரி : நீங்க இரண்டு பேர் சொன்னதும் தெரியாத செய்தி. Night ல எங்க அப்பாவுக்குத் தூக்கமே வரலைன்னு சொல்லிக்கிட்டே இருக்காருப்பா.

தீபிகா : தூக்கமின்மையால் வரும் புதுப்பிரச்சனையைக் கண்டு பிடிச்சிருக்காங்க. குவைத் நாட்டில் உள்ள டிடிஐ எனும் ஆய்வு மையம் தூக்கமின்மையால் ஏற்படும் புதுப்பிரச்சனையைக்

கண்டறிந்துள்ளது. 237 பேரை ஆய்வுக்கு உட்படுத்தி, 24 மணி நேரம் விழித்திருக்க செய்ததில், அவர்களுடைய உடலில் என்சிஎம் (நான் கிளாசிக் மோனோசைட்ஸ்) செல்கள் அதிகமாகி இருப்பதைக் கண்டு பிடித்தனர். அடுத்த இரு தினங்கள் சாதாரணமாக தூங்கி எழச் செய்து பார்த்ததில் இந்த என்சிஎம் எண்ணிக்கை சராசரியானது.

கௌரி : என்சிஎம் ன்னு சொல்றியே! அப்படின்னா என்னா ?

தீபிகா : என்சிஎம் என்பவை ரத்த வெள்ளை அணுக்களில் ஒரு வகை. நம் உடலில் நோய் ஏற்படும் போது இவை பெருகி, நோய்களை எதிர்த்துப் போராடும். ஆனால் அவசியமின்றி இவை பெருகுவது நல்லதல்ல. இதனால் வயிற்றுவலி, காய்ச்சல் மற்றும் சில விதமான புற்றுநோய்கள் வரை ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அதனால் தொடர் தூக்கமின்மை மிகவும் ஆபத்தானது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

மீனா : நமக்கு தூக்கத்தை ஏற்படுத்துவது மெலடோனின் எனும் ஒரு ஹார்மோன். இது பீனியல் சுரப்பியில் உற்பத்தியாகிறது.

காந்திமதி : அந்த சுரப்பி எங்கே இருக்கு ?

மீனா : மூளையின் மையத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய நாளமில்லா சுரப்பி ஆகும். இந்த மெலடோனின் ஹார்மோன்தான் இரவில் தூக்கத்தையும், பகலில் விழிப்பையும் தருகிறது. இது மூளைக்குள்ளே சென்று மூளையை ஓய்வு கொள்ளச் செய்கிறது. ஆனால் இரவு நேரம் அதிக அளவில் மொபைல், மடிக்கணினி முதலிய டிஜிட்டல் ஒளிகள் நம்மீது படுவதால் இந்த ஹார்மோனின் சுரப்பு குறைகின்றது. தூக்கத்தைக் கொடுப்பதற்காக மெலடோனின் ஹார்மோனை மாத்திரையாக எடுத்துக் கொள்ளலாம். எந்த அளவு எந்த நேரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென இத்தாலி, சுவீடன், இங்கிலாந்து நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்து, தூங்கச் செல்வதற்கு மூன்று மணி நேரம் முன்பாக 4 மில்லி கிராம் அளவு இந்த ஹார்மோனை எடுத்துக் கொள்வது நல்ல தூக்கத்தை வரவழைக்கும் என கண்டறிந்துள்ளனர்.

சித்ரா : T.V. யில் சுனிதாவில்லியம்ஸ், புட்ச்வில்மோர் இருவரும் டிராகன் விண்கலத்திலிருந்து புளோரிடா கடலில் வெற்றிகரமாக, பத்திரமாக பூமிக்குத் திரும்பியதற்கு கடவுளுக்குத் தான் நன்றி கூறவேண்டும்.

பிரியா : ஆமாம்பா! சுனிதா வில்லியம்ஸ் ஓர் இந்திய வம்சாவளிப் பெண். அமெரிக்காவின் ஓஹியோவில் குஜராத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தீபக் பாண்ட்யா இவரது தந்தை என்பதில் நமக்கு ஒரு பெருமை!

சித்ரா : 286 நாட்கள் விண்வெளியில் விண்கலத்தில் இருந்த இவர்களைக் காப்பாற்றி அழைத்து வர அமெரிக்க வீரர் நிக்ஹேக், ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் இருவரும் தொழிலதிபர் எலான்மஸ்க் அவர்களின் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் பால்கன் 9 ராக்கெட் மூலமாக டிராகன் விண்கலத்தில் ஐ.எஸ்.எஸ் எனப்படும் சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுனிதா வில்லியம்ஸ் தன்னுடன் பகவத்கீதையை எடுத்துச் சென்றிருந்தாராம். அதுதான் அவருக்கு ஆத்மபலத்தைத் தந்ததாக கூறி உள்ளார்.

பிரியா : அது மட்டுமல்ல! இந்த ஆண்டு கடைசியில் விண்வெளிக்கு அனுப்ப இருக்கும் பயணத்துக்கு தலைவராக இந்திய விமானப்படை கேப்டன் சுமான்சு சுக்லா தேர்வாகி உள்ளார். விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் ராகேஷ்சர்மாவின் பயணத்துக்கு 40 ஆண்டுகளுக்கு பிறகு இரண்டாவது இந்தியராக விண்வெளிக்கு செல்ல இருக்கிறார்.

மீரா : விண்வெளியைப் பத்தி பேசிட்டோம். நான் பாம்பன் பாலம் பற்றி சொல்றேன். இது ஒரு தூக்குப் பாலம், மண்டபம் எனும் தீவினையும் ராமேஸ்வரத்தையும் இணைக்கும் ரயில்வே பாலம். கப்பல்கள்வரும் சமயத்தில் தானாகவே பாலம் இரு பக்கத்திலும் தூக்கிக் கொள்ளும். 1914–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசினரால் அமைக்கப்பட்ட பாலத்தின் வயது கருதி, 2019–ஆம் ஆண்டு நவம்பரில் புதிய பாலத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய பாம்பன் பாலம் கடல் மட்டத்திலிருந்து 12.5 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டு ஏப்ரல் 6–ஆம் தேதி, ராமநவமி அன்று, நமது பிரதமரால் திறந்து வைக்கப்பட உள்ளது. பாலத்தின் நடுவில் உள்ள பதாகைகள் கப்பல் எளிதில் கடந்து செல்ல ஏதுவாக தானியங்கி முறையில் தூக்கும் திறன் கொண்டவை.

ஆண்டாள் : நான் எட்டாவது படிக்கும் போது பாம்பன் பாலம் பார்க்கவென்றே மண்டபத்தில் தங்கி, கப்பல் வரும் போது அது தூக்குவதையும் ஆச்சரியமாக பார்த்து, ராமேஸ்வரம், தனுஷ்கோடி பெற்றோர்களுடன் சென்று வந்தது பசுமையாக நினைவில் உள்ளது.

காந்திமதி : சரிப்பா! டைம் ரொம்ப ஆயிடுச்சு! நான் இன்னைக்கு ஏதாவது கோவில் பற்றி சொல்லலாம் என நினைச்சேன். அடுத்த வாரம் சொல்றேன்!

ஆண்டாள் : வெயில் தாங்கலப்பா! யாராவது வீட்டிலேயே ஜுலை மாசம் வரைக்கும் வச்சுக்கலாம்பா!

கௌரி : அடுத்த மாசம் எங்க வீட்லே meeting ஐ வைச்சுக்கலாம். எங்க வீடு மடிப்பாக்கத்தில் இருக்கு. Address, Location அனுப்பி வைச்சுடறேன். எல்லாரும் அவசியம் வந்துடுங்க! இத்துடன் அனைவரும் கலைந்தனர்.

நன்றி! வணக்கம்!

## அயோத்தி - ஓர் அற்புத தரிசனம்

– திருமதி. மைதிலி வைத்தியநாதன்

நாங்கள் சுமார் 80 பேர் சூப்பர் யாத்ரா குழுவில் இணைந்து கயா, காசி, பிரயாக்ராஜ் மற்றும் அயோத்தியை தரிசிக்க 5 நாட்கள் பயணமானோம். மற்றவர்கள் 5 நாள் பயணமேற்க, நானும், என் கணவரும் 3 நாள் பயணமாக 18–ஆம் தேதி இரவு வாரணாசி சென்றோம். எல்லோரும் கங்கை நீராடி, தர்ப்பணம் செய்ய புறப்பட, நாங்கள் கால பைரவரைத் தரிசனம் செய்து காசி விசுவநாதர் ஆலயம் சென்றோம். எங்கள் குரு கங்கோத்ரி சுவாமிஜியின் காசி மடத்திலிருந்த சீடர்கள் விசுவநாதர் கோவிலில் பூஜை செய்வதால், எங்களின் தரிசனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை நன்முறையில் செய்திருந்தனர். மிகச் சிறப்பான தரிசனம் கிடைத்தது. இரவு சப்தரிஷி பூஜைக்கும் ஏற்பாடு செய்திருந்தமையால், அந்த தரிசனமும் மனம் நெகிழ்வுற கிடைக்கப்பெற்றோம்.

நான்கைந்து முறை வந்திருந்தும் காசியில் தரிசித்திராத வியாச காசியையும், துர்கா மாதா கோவிலையும் பார்க்க ஆவல் மிகக் கொண்டு திரு. சாதிக்அலி அவர்களிடம் கேட்க, அவர் ஒரு டாக்ஸி ஏற்பாடு செய்து, அவரும் எங்களுடன் வர நேராக காசி ராஜா அரண்மனை பார்த்து, 12 மணிக்கு துர்கா தேவி கோவில் அடைந்தோம். ஆனால் கருவறை மூ டப்பட்டுவிட்டது. அவ்வமயம் அங்கு வந்த அர்ச்சகர், எங்களை உள்ளே அழைத்துச் சென்று வெளி பிரகாரத்தில் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியிருந்த துர்க்காதேவியை தரிசனம் செய்வித்தார். மேலும் அவர் அங்கிருந்த தலைமை அர்ச்சகரையும் அறிமுகப்படுத்தியதுடன், அந்த தேவி மிகுந்த சக்தி படைத்தவளெனவும், கேட்பதையெல்லாம் கொடுப்பவள் என்றும் கூறினார்.

மனம் குளிர்ந்த துர்க்காதேவியின் தரிசனம் முடிந்து 10 கிலோமீட்டர் தூரத்திலிருந்த வியாசகாசியை அடைந்தோம். கோவில் மதிய நேரத்திலும் திறந்திருந்தது, நாங்கள் செய்த புண்ணியமே! இந்த வியாசகாசிக்கு ஒரு சிறப்பான கதை உள்ளது. நான்கு யுகங்களையும் கடந்து நிற்கும் ஒரு ஷேத்திரம் உண்டெனில், அது காசி மட்டுமே. சிவனின் நிரந்தர இருப்பிடம் அதுவே என நம்பிய வியாசமகரிஷி தன் சீடர்களுடன் காசியில் தங்கி இருந்தார். சீடர்கள் தினமும் பிச்சை எடுத்து வர, அதை உண்டு அனைவரும் தினமும் விசுவசநாதரைத் தரிசித்துக் கொண்டு இருந்தனர். வியாசரை சோதிக்க எண்ணிய ஈசன் பிச்சையிடுவதை தடுத்து விடுகிறார். சீடர்கள் வீடு வீடாக சென்று பிச்சை கேட்க, யாருமே எதுவும் தரவில்லை. 10 நாட்கள் கடந்தும் யாரும் பிச்சையிடாததால், வியாசர் நானே இன்று பிச்சைக்கு செல்கிறேன் எனப் புறப்பட்டுச் சென்றார்.

வியாசரைப் பார்த்த பெண்மணி அவர் காலில் விழுந்து வணங்கினாலும், பிச்சையிட மறுக்கிறாள். கோபம் கொண்ட வியாசர், 'நீ காசியில் பிறந்து என்ன பயன்? உனக்கு ஒரு புண்ணியமும் கிடைக்காதென சாபமிடுகிறார். உடன் சிவபெருமான் நேரில் காட்சி கொடுத்து, வியாசரே, "இது எனது இருப்பிடம். இங்கு வரமோ, சாபமோ நான் மட்டுமே கொடுப்பேன். நீ எப்படி, இங்கு சாபமிடலாம்? இனி உனக்கு காசியில் இடமில்லை. புறப்படு" என்கிறார். வியாசர் தனது தவற்றினுக்கு வருந்தி மன்னிப்பு கேட்க, ஈசனும் கோபம் தணிந்து, விசேஷ நாட்களில் மட்டும் நீ இங்கு வந்து என்னைத் தரிசிக்கலாம். மற்றபடி நீ இனிமேல் காசியில் தங்கக்கூடாது. இங்கிருந்து சென்றால் உனக்கு பல நன்மைகள் விளையும் என்கிறார். உடனே வியாசரும் காசியை விட்டு வெளியேறி, 17 கி.மீட்டர் தொலைவில் வியாசகாசியை நிர்மாணிக்கிறார். அதையே இருப்பிடமாகக் கொண்டு, விஷ்ணு அம்சமாக ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்கிறார். அதை நாம் தொட்டு அபிஷேகம் செய்து வழிபடலாம். பின் வியாசர் நைமிசாரண்யம் சென்று வேதங்கள் தொகுத்து எழுதி வேத வியாசர் எனும் திருநாமம் பெற்றார். அதன் பின் பத்ரிநாத்திற்கு மேலே உள்ள மானா என்ற இடத்தில் ஒரு குகையில் அமர்ந்து மகாபாரதத்தை அவர் சொல்ல, விநாயகர் கொம்பொடித்து எழுதினார். மானாவில் புறப்படும் சரஸ்வதி நதியின் சல சல சப்தம் விநாயகருக்கு இடைஞ்சலாக இருந்ததால், அதை அந்தர்வாகினியாக பூமிக்குள் செல்லும்படி சாபமிட்டார். இன்றளவும் வியாசர் காசி விசுவநாதர் கோயிலுக்கு பிரதோஷம், சிவராத்திரி போன்ற நாட்களில் விஜயம் செய்து வழிபடுவதாக ஐதீகம்.

இதனை ஆராய்ச்சி செய்த ஒரு வெளிநாட்டவர் வியாசர் எந்த ரூபத்தில் வருகிறார் என்று தெரிந்து கொள்வதற்காக ஒரு சிறிய முயற்சி மேற்கொண்டார். கோவிலில் உள் நுழையும் இடத்திலிருந்து ஒரு பிடி அரிசியை கும்பம், கும்பமாக சிறிது தூரத்திற்கொரு முறை என சந்நிதி வரை வைத்து சென்றார். பக்தர்கள் உள்ளே வரும் போது அதைக் கவனிக்காமல் உள்ளே சென்றனர். ஆனால் ஒரு வயோதிக பக்தர் கோவிலுக்குள் நுழைந்ததில் இருந்து, ஒரு அரிசியைக் கூட விடாமல் சேகரித்து, தனது இடுப்புத் துணியில் முடிந்து கொண்டார். அந்த வெளிநாட்டவர் அவரிடம் நீங்கள் வியாசர் தானே! எனக் கேட்க, அம்முதியவர் பதில் ஒன்றும் கூறாமல், சிரித்துக் கொண்டே சென்று விடுகிறார்.

ஆனால் அந்த வெளிநாட்டவர், அவரே வியாச மகரிஷி என உறுதிபட கூறுகிறார்.

கோவிலில் படி ஏறியதும் இடது பக்கம் கோபாலகிருஷ்ண மந்திர் உள்ளது. இதில் லட்சுமி நரசிம்மர், லட்சுமி நரசிம்ம சாளக்கிராமம், புரந்தரதாசர், விஜய விட்டலா சிலைகள் உள்ளன. அக்கோவில் அர்ச்சகர் புரந்தரதாசர் பற்றி நிறைய கதைகளைக் கூறினார். அங்கிருந்து தங்கி இருந்த விடுதிக்கு திரும்ப வந்து, மாலை சப்தரிஷி பூஜைக்காண சென்றோம். 6 மணிக்கே உள்ளே சென்று ஏழரை மணிக்கு பூஜை

ஆரம்பிக்கும் வரை அமைதியாக ருத்ரம் படித்தது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. அது ஒரு சிவானுபவம்; எழுத்தில் வடிக்க இயலாது. சாமகானம் ஒதிய வண்ணம், ஏழு ரிஷிகள் (குருக்கள்) அமர்ந்து செய்யும் பூஜையே சப்தரிஷி பூஜை எனப்படும். விசுவநாதருக்கு அனைத்து அபிஷேகமும் நடைபெற்று, கடைசியாக கங்கை நீரால் அபிஷேகம் செய்வித்து, பின் சந்தன காப்பு, ஆடை, ஆபரணங்கள், கவசம் அணிவித்து, நாகாபரணம் வைத்து, பூ, மாலை, வெள்ளி வில்வமாலை, பெரிய வெள்ளி ருத்ராட்ச மாலையும் அணிந்து காட்சிஅளிக்கும் விசுவநாதர் தரிசனம் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். பிறகு மங்கள ஆரத்தி சாமகானம் ஓதியபடியே காட்டுகிறார்கள். பிறகு தீபத்துடன் பக்தர்களின் நடுவில் வருவதுடன், மாலைகள், பூக்கள், சந்தனம் போன்றவைகளைக் கொடுப்பார்கள். இந்த நிகழ்ச்சி முடிந்ததும் நாங்கள் விசுவநாதரின் அருகில் சென்று பாலாபிஷேகம் செய்து பூக்கள் சாற்றி வழிபட்டு, திரும்பினோம்.

மறுநாள் காலை பிரயாக்ராஜ் சென்று, 10 நபர்களுக்கு ஒரு படகு என திரிவேணி சங்கமம் அடைந்து, புனித நீராடி திரும்பினோம். அந்நதி 12 அடி ஆழம் கொண்டது என்பதை அறிந்தோம். அலகாபாத் அக்பர் கோட்டையில் தற்சமயம் 3 மியூசியங்கள் உள்ளன என கூறக்கேட்டு, உள்ளே செல்ல நேரமின்மையால், அருகிலிருந்த பாதாள ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்றோம். படி இறங்கி உள்ளே சென்றால், ஆஞ்சநேயர் படுத்த வண்ணம் காட்சி தருகிறார். வேறு எங்கேனும் ஆஞ்சநேயர் படுத்த வண்ணம் காட்சி தருகிறாரா ? என யோசித்தும் என் சிற்றறிவுக்குப் பதில் கிடைக்கவில்லை.

மதிய உணவை முடித்து, அயோத்திக்குப் புறப்பட்டோம். இரவு ஏழு மணி அளவில் ஒரு அழகான விடுதியில் தங்கினோம். அங்கு எங்கள் அனைவரையும் ராமர் துண்டு அணிவித்து வரவேற்றார்கள். ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் காலை 5 மணிக்கு கிளம்பி 12 கி.மீதூரத்திலிருந்த கோவிலை அடைந்தோம். காலை 6 மணிக்கு கோவில் திறக்கும் சமயத்தில் நாங்கள் அங்கிருக்க கூட்டம் சிறிது குறைவாக இருந்தது. 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சக்கர நாற்காலி வசதி உள்ளது. நமது ஆதார் அட்டையைக் காண்பித்து அதை பதிவு செய்து கொள்ள வேண்டும். கட்டணம் ரூ. 150 அதையும் தரிசனம் முடிந்து திரும்பும் போது கொடுத்தால் போதும். எங்களின் சக்கர நாற்காலியைத் தள்ளி வந்த பையன் பாஸ்போர்ட் உள்ளதா ? என கேட்க, பாஸ்போர்ட் இருப்பின் வி.வி.ஐ.பி தர்ஷன் கிடைக்கும் என்றார். எங்களை நேராக அப்பாதைக்கு அழைத்துச் செல்ல, அருகில் சென்று, கூட்ட நெரிசலின்றி, சலோ, சலோ என்ற அதட்டல் இல்லாமல் நீண்ட நேரம், சுமார் 15 நிமிடங்கள் கண்குளிர பாலராமரை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கப்பெற்றோம். அவரதுபுன்னகைபூத்த முகத்தைப் பார்ப்பது விட்டு வர மனசே இல்லை. பாலராமருக்கு வலது புறம் பெரிய சாளக்கிராமம்; இடது புறம் சிறிய உற்சவமூர்த்தி, முன்புறம் பொன்னால் ஆன கருடாழ்வார், இப்படி ஒரு தரிசனம் நாங்கள் எதிர்பாராதது; மனம் மிகவும் நிறைந்திருக்க பயணம் மிகவும் வெற்றிகரமாக முடிந்ததற்கு அந்த இறைவனுக்குக் கோடி கோடி நமஸ்காரங்கள்! லக்னௌ விமான நிலையத்திலிருந்து சென்னை வந்து, சிறப்பான ஏற்பாடுகள் செய்த சாதிக் பாய்க்கு நன்றி கூறி வீடு திரும்பினோம்!

நன்றி ! வணக்கம் !

---

## அன்றாடம் தோப்புக்கரணம் போடுவதால் கிடைக்கும் நன்மைகள்!

கோவிலுக்குப் போகும் பக்தர்கள் எல்லாம் திருக்கோவிலில், முதலில் உள்ள விநாயகர் சன்னதி முன் தோப்புக்கரணம் போட்டுத் தலையில் குட்டிக் கொள்வர், அதன் பின்னே, மற்ற தெய்வச் சந்நதிகளுக்குச் செல்வர், பள்ளிகளில் வீட்டுப்பாடம் எழுதிவராத மாணவர்களை, ஆசிரியர்கள், தோப்புக்கரணம் செய்யச் சொல்வர்.

**எதற்காக தோப்புக்கரணம்?**

பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் சிலரும், கோவிலில் இறைவன் முன் செய்கின்றனர். அவர்களின் பிள்ளைகளும் பள்ளியில் செய்கின்றனர். ஏன் ?

பெற்றோர் ஏன் கோவிலில் தோப்புக்கரணம் போடுகின்றனர் ? ஒரு வேளை, அவர்கள் எல்லாம் வாழ்க்கைப் பாடத்தை ஒழுங்காகச் செய்யாததனால், கோவிலில் தோப்புக்கரணம் போட, சாமி சொல்லியிருப்பாரோ ?

அப்படியில்லையாம், கோவில்களில் தோப்புக்கரணம் போடச் சொன்னது, நம் முன்னோர்களாம்! ஆம். அவர்கள் வழிவழியாக, இதுபோன்ற நிறைய விஷயங்களை, நமக்கு வாழ்க்கை நியதிகளாக வகுத்துச் சென்றிருக்கின்றனர்.

கோவில்களில் போடப்படும் தோப்புக்கரணம் என்பது நம் முன்னோரின் உடல் அறிவியல். ஆமாம், இன்னும் நம்முடைய சிற்றறிவுக்கு எட்டாத எத்தனையோ விஷயங்களை, கோவில்களில் நாம் செய்யும் நடைமுறைகளாக மாற்றி வைத்திருக்கின்றனர் நம் மூதாதையர். தோப்புக்கரணம், என்ற ஒற்றைப் பயிற்சியே, அனைத்து வகை உடற்பயிற்சிகளுக்கும், முன்னோடியாக விளங்குகிறது. மேலும், உடற்பயிற்சி செய்யாவிடினும், அல்லது தெரியாவிட்டாலும், நீங்கள் தினமும், தோப்புக்கரணம் போட்டு வந்தால் போதும்.

பள்ளிகளில் ஆசிரியர்கள் பாடங்கள் ஒழுங்காகப் புரிந்துகொள்ளாதமாணவர்களைஎப்படிதோப்புக்கரணம் போடச் சொல்கிறார்கள் என்று தெரியுமா ?

இடது கையை மடக்கி, இடது கை பெருவிரலால் வலது காது மடலின் நுனியைப் பிடித்துகொண்டு, வலது கையை மடக்கி, வலது கை பெருவிரலால், இடது

காது மடலின் நுனியைப் பிடித்துக்கொண்டு, இரு கால்களையும் மடக்கி, முதுகை வளைக்காமல் நேராக, உட்காரும் நிலையில், இந்த தோப்புக்கரணம் போட வேண்டும், எத்தனை முறை ?

அது ஆசிரியரின் விருப்பத்தைப் பொறுத்தது, ஆனாலும், அவர் சொல்லும் வரை நிறுத்தக் கூடாது. பொதுவாக எல்லோரும், படிக்காத மாணவர்களுக்கு இது ஒரு தண்டனையே, என நினைப்பார்கள், அது தவறு, மாறாக, அந்த மாணவர்களே, பின்னர் வகுப்பில் முதல் மாணவர்களாக வரவேண்டும். அதற்காகவே, ஆசிரியர்கள் நல்ல எண்ணத்தில், அதை செய்யச் சொன்னார்கள்.

**நன்மைகள் :** இந்தச் செய்முறைகளால், மாணவர்கள் உடலில் உண்டாகும் மாற்றங்கள் என்னென்னத் தெரியுமா ? மந்தமான மனநிலையுள்ள மாணவர்களின் மூளை செயல்திறன், அவர்கள் காது நுனிகளில் தொடுதல் மூலமான பயிற்சிகளினால், மூளை நினைவு செல்களின் வளர்ச்சி தூண்டப்பட்டு, நினைவாற்றல் சக்தி, ஞாபக சக்தி அதிகரிக்கிறது.

**நினைவு அதிகரிக்கும் :** தொடர்ச்சியாக செய்யச் செய்ய, மூளை, சுறுசுறுப்படைகிறது, விழிப்படைந்த நினைவு செல்களின் ஆற்றலால், மாணவர்களின் நினைவாற்றல் மேலோங்கி, அவர்கள் பாடங்களில் சிறப்பான விகிதத்தில் தேர்ச்சி ஆகின்றனர். மேலும், ஆசிரியர்கள், ஆர்வமில்லாத மாணவர்களை, சமயத்தில் காதுகளைப் பிடித்துத் திருகுவார்கள். அதுவும், இதே பலன்களுக்காகத் தான் செய்தார்கள். இப்போது சொல்லுங்கள், தோப்புக்கரணம் ஒரு திறவுகோல் தானே, மனிதனின் மந்தநிலையை நீக்கி, அவனுக்கு உற்சாகமும் ஊக்கமும் தர, முன்னோர்கள் விட்டுச் சென்ற வரம்.

**புதிய ஆற்றல் :** தோப்புக்கரணம் பெரியவர்களுக்கு என்ன நன்மைகள் செய்யும் என்றால், தினமும் அதிகபட்சம் ஐந்து நிமிட நேரம் தோப்புக்கரணம் செய்து வந்தால், மூளைக்கு இரத்த ஓட்டம் சீராகச் சென்று, உடலின் ஆற்றல் நிலை தூண்டப்பட்டு, ஞாபக சக்தி அதிகரிக்கும். உடலில் புத்துணர்ச்சியும், செயல்களின் ஊக்கமும் உண்டாகும். மனதில் ஏற்படும் மன அழுத்தம், மனச்சோர்வு விலகும். மேலும், உடல் கை கால் தசைகள் எல்லாம் இறுகி, உடல் வலுவாக விளங்கி, ஆரோக்கியமாக வாழலாம். நினைவாற்றல் சக்தி எல்லோருக்கும் அவசியம். நினைவாற்றல் குறைந்த மாணவர்கள் படிப்பில் கோட்டை விடுகின்றனர். நடுத்தர வயதினரும், நினைவாற்றல் குறைபாடு காரணமாகவே, தினசரி வாழ்வில் பல இன்னல்களை, சந்திக்க நேரிடுகிறது. இதைப்போக்க என்ன செய்ய வேண்டும் ?

தினமும் தோப்புக்கரணம் போட்டுவர, சீக்கிரம் பிரச்சனை தீரும், இல்லை, நான் கோவில்களில் எல்லாம் போய் தோப்புக்கரணம் போடமாட்டேன் என்று சொன்னால், சரி வீட்டில் தோப்புக்கரணம் போடுங்கள்.

நீங்கள் வீட்டில் உள்ள அறையில் தனிமையில், ஒன்று, இரண்டு..... என எண்ணிக் கொண்டு, தோப்புக்கரணம் போடுங்கள். இடையில் உங்கள் மனைவி வந்து எட்டிப்பார்த்து, நீங்கள் அசடு வழிய நேர்ந்தால், அதற்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

முன்னோர்நமக்குவிட்டுச்சென்றதோப்புக்கரணம் : நம் மூதாதையர் கண்டுபிடித்த அரிய உடற்பயிற்சிக் கலை, இந்த தோப்புக்கரணம், ஆயினும் இன்று நிலை என்ன, நாம் பள்ளிகளில் அவற்றை மறந்துவிட்டோம், எந்த ஆசிரியரும் இதை செய்யச் சொல்வதில்லை. அவருக்குத் தெரிந்தால் தானே, அவர் சொல்லிக் கொடுப்பார். கோவில்களில் இப்போது நாம் தோப்புக்கரணம் இடுவோரைக் காண்பது மிக அரிதாகிவிட்டது. எல்லோரும் இப்போது வேகமான உலகின் விளம்பரத் தூதர்களாக மாறி, கோவிலில் விநாயகர் சன்னதி முன், கால்களை சற்றே வளைத்துக் கொண்டு, கைகளை மடக்கி, தலையின் முன்புறம் குட்டிக்கொண்டு நகர்ந்து விடுகின்றனர். பாஸ்ட் பார்வார்ட் தோப்புக்கரணம்! நம் முன்னோர் சொன்னபோது, அலட்சியப்படுத்திய நாம், இன்று வெள்ளைக்காரன், சூப்பர் பிரெயின் யோகா'' என்று நம்மிடமே கொண்டு வந்து, இந்த யோகா, உங்கள் மூளையின் இரு பக்கங்களையும் செயல்பட வைக்கும், உங்கள் ஞாபக சக்தியை அதிகரிக்கும், பெண்களின் பிரசவம் எளிதாகும். அல்சைமர், ஆட்டிசம் போன்ற நோய்களை எல்லாம் சரி செய்யலாம், என்று விளம்பரம் செய்து பொருளீட்டுகின்றான்.

**யோகாவை வளர்ப்போம் :** யார் வீட்டு சொத்தை, யாரிடம் வந்து விற்கிறான், பாருங்கள்! இதைவிடக் கொடுமை, நாமும் வரிசையில் நின்று, அவர்களிடம் நேரம் வாங்கிக் கொண்டு, பயிற்சியை செய்து வந்து பெருமை பேசுகிறோம். ''சூப்பர் பிரெயின் யோகா''வில் எங்க பிள்ளையை சேர்த்த பிறகு தான், அவன் சூப்பரா படிச்சு, நல்ல மார்க் வாங்கிட, இப்போ மெடிக்கல் படிக்கிறான், என்று நம்முடைய வருங்காலத் தலைமுறைகள் நோய் நொடி இல்லாமல் நல்லா வாழணும்னு, நம் பெரியவங்க, நல்ல மனசோட செஞ்சதை, இந்த நவீனத் திருடர்கள், நம் பாட்டன் சொத்தை, நமக்கே கூச்சமில்லாமல் விற்கிறார்கள்.

நாமும் அந்நிய மோகத்தில், அதை உபசரித்து வரவேற்கிறோம். இன்றைய தலைமுறைகளின் வாழ்வும் சிந்தனையும், மிக மிக வேறுபட்ட பாதைகளில், நம்முடைய பாரம்பரிய பெருமையை மறந்து, செயற்கை உபதேசங்களின் பின் சென்று கொண்டிருக்கிறது.

பகுத்தறிந்து, ஒரு விஷயத்தை ஆராய்ந்து, அறியும் ஆற்றல் நிலை, இப்போது எங்கும் காணமுடியவில்லை. பாரம்பரியக் கலைகள் அறிந்து, வாழ்வில் அவற்றைக் கடைபிடித்து, நம்மவர்க்கும் பகிர்ந்து நலமுடன் வாழ்வோம்! எதிர்கால தலைமுறையைக் காப்போம்!

– அர்ச்சனா சுவேதாரண்யம், பெசன்ட் நகர்,
சென்னை–90. செல் : 9943702054

# அந்தமானின் அழகை ரசிப்போம் வாருங்கள்.

நங்கநல்லூர் சங்கம் ஏற்பாடு செய்து 33 (நபர்கள்) சொந்தங்கள் 6 நாள் பயணமாக அந்தமான் சுற்றுலா சென்று ஆனந்தமாக அந்தமான் அழகை ரசித்ததை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

7–2–25 காலை 10.30 மணி விமானத்தில் புறப்படுவதற்கு 8.30 மணிக்கு 33 பேர் சரியான நேரத்தில் வந்து விமான நிலையத்தில் ஒன்றிணைந்து ஒத்துழைப்பை அங்கேயே ஆரம்பித்து ஆனந்தமாக விமானத்தில் புறப்பட்டோம். 12.30 மணியளவில் அந்தமான் வீரசாவார்கர் விமானநிலையம் சென்றடைந்தோம். அங்கு நம் சங்க செயலாளர் திரு. கோ. தியாகராஜன் செயற்குழு உறுப்பினர் திரு. Er. கார்த்திகேயன் அவர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த Book 2 Travel உரிமையானர் திரு. ராஜா அவர்கள் 33 பேர் அமரும் பேருந்துடன் எங்களை வரவேற்று அங்கு வீரசாவார்கர் சிலையின் அருகில் நின்று 33 பேரும் முதல் புகைப்படத்தை எடுத்து பதிவிட்டுக்கொண்டு பயணத்தை தொடங்கிணோம்.

முதலாவதாக செல்லுலார் ஜெயிலை பார்க்கப் புறப்பட்டோம். அங்கு எங்களுக்கு வழிகாட்டியாக நியமித்தவர் தமிழில் அழகாக ஜெயிலின் வரலாற்றை கண் முன் கொண்டு வந்தது போல் விளக்கமாக கூறி பின் சுற்றிக்காட்ட அழைத்து சென்று ஒவ்வொரு இடத்தையும் காட்டி காட்சிகளாக கண்முன் கொண்டுவந்தது மிக சிறப்பு அதை முடித்து அடுத்ததாக Corbyn's Guve Beach சென்று ரசித்து தேனீர் அருந்திய பின் ஒலி, ஒளி காட்சியை இரவு 7.30 மணிக்கு மீண்டும் ஜெயிலில் வந்து பார்த்தோம்.

2 வது நாள் காலை "Chatham Saw Mill" சென்றோம் ஆசியாவில் மிகப் பெரிய மரவாடி என்பதுதான் அதன் சிறப்பு அங்கு நமக்கு பாதுகாப்பு உடை கொடுத்து உள்ளே அனுமதித்தார்கள். ஆட்கள் குறைவு மிஷின் மூலமாக பிரமாண்டமான மரத்தை சுலபமாக அறுப்பதை பார்க்க வியப்பாக இருந்தது. அடுத்து ''ராஸ் ஐலேண்டு'' சென்றோம். தற்சயம் ''நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்'' என்ற பெயரில் மாற்றப்பட்டுள்ளது. அங்கு சுனாமியால் அழிந்த நிலையில் சில அரசு கட்டிடங்களும் நிறைய மயில், மான்களையும் பார்த்து மகிழ்ந்தோம். பேட்டரி காரில் சுற்றி வந்து லைட் ஹவுஸ் கண்டுகளித்து திரும்பினோம். அடுத்து ''நார்த் வே ஐலேண்டு'' கடலில் கருநீல தண்ணீர் அடியில் இருக்கும் பவளப்பாறைகள், அதில் வாழும் உயிரினங்களை கண்டுகளித்து படகு மூலமாக திரும்பும் போது சூரியன் மறைவதையும் பார்த்து ரசித்தபடி தங்கும் விடுதிக்கு சென்றோம்.

3 வது நாள் ''ஹேவ் லாக் ஐலேண்டு'' செல்வதற்கு காலை 4.30 மணிக்கு துறைமுகத்திற்கு சென்று கப்பலில் 2.30 மணி நேரம் பயணத்தை தொடங்கினோம். அடுத்து ராதா நகர் கடற்கரை, இது பிரபலமான கடற்கரைகளில் ஒன்று. அனைவரும் கடலில் நீராடி மகிழ்ந்தோம்.

4–வது நாள் கப்பல் வழியாக ''நீல் ஐலேண்டு'' சென்றோம் ''பரத்பூர் கடற்கரை'' சென்று அழகை ரசித்து, அடுத்து அங்கிருந்து ''நேச்சுரல் பிரிட்ஜ்'' பார்க் வந்தோம். 1-½Km தூரம் நடந்து அதன் அருகில் போக கரடுமுரடான பாதைகளை கடந்து இயற்கை பாலத்தை அடைந்து, பார்த்த பிறகு மீண்டும் கப்பல் மூலமாக போர்ட்பிளேர் துறைமுகத்தில் வந்திறங்கினோம்.

5 வது நாள் இரவு 2.30 மணிக்கு பஸ்ஸில் புறப்பட்டு வனத்துறையின் ஒப்புதல் வாங்கி, இங்கு ஆதிவாசிகள் வாழும் இடம் என்பதால் வனத்துறை உதவியுடன் 3 மணி நேரம் பயணம் செய்தோம். அடர்ந்த காடுகள் வழியாக அதை கடந்து பஸ், கார் மற்றும் கனரக வாகனங்கள் ஏற்றும் கப்பலில் நாங்களும் இணைந்து 45 நிமிடம் பயணித்தோம். அதிலிருந்து இறங்கி படகின் மூலம் Lime Stone Cove" பார்க்க மாங்குரோவ் காடுகள் கடந்து ஒரு இடத்திலிருந்து கரடுமுரடான பாதையில் 3 km தூரம் நடந்து சென்றுதான் பார்க்க வேண்டும். நல்ல இருட்டு எங்களுக்கு வழிகாட்டியாக வந்தவர் டார்ச்லைட் அடித்து அதன் சிறப்பை சிறப்பாக விளக்கினார். ரசித்து புகைப்படம் எடுத்துக்கொண்டு மதிய உணவை முடித்து "Mud Volcano" பார்த்து ரசித்து கப்பலை பிடித்து வந்தடைந்தோம். இந்த 6 நான் சுற்றுலாவில் ராஜாவுக்கு நன்றி சொல்லி விடைபெறும் நேரத்தில் ராஜா அவர்கள் 33 சொந்தங்களுக்கும் நினைவு பரிசு கொடுத்து மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அனைவரும் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்து புறப்பட்டு சென்னைக்கு மதியம் 12.30 மணிக்கு வந்திறங்கினோம்.

இதை ஏற்பாடு செய்த நங்கநல்லூர் சங்கத்திற்கு மிக்க நன்றி செயலாளர் திரு. கோ. தியாகராஜன், செயற்குழு உறுப்பினர் திரு. Er. கார்த்திகேயன் அவர்களுக்கும் சுற்றுலா சென்றவர்கள் சார்பாக நன்றி .சுற்றுலா நிறைவடைந்தது மீண்டும் அடுத்த சுற்றுலாவில் சந்திப்போம்

– என்றும் உங்களுடன்

லதா கார்த்திகேயன்,

நங்கநல்லூர்,

மகளிர் அணி. 9486535928.

## 100–ஆவது பிறந்த நாள் மற்றும் 21–ஆம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில்
15.04.1925.





இறைவன் காலடியில்
15.04.2004.



வி.சுப்பிரமணியம் பிள்ளை

சீர்காழி வட்டம், வரவுகுடி தெய்வத்திருவாளர்கள் அ. விசுவநாதம் பிள்ளை, காசாம்பு ஆச்சி, இவர்களின் மகனும், இளந்தோப்பு மு. சிவகடாட்சம் பிள்ளை, கௌரி ஆச்சி இவர்களின் மருமகனுமான திரு.வி.சுப்பிரமணியம் பிள்ளை அவர்களின் 100–ஆவது பிறந்த நாள் மற்றும் 21–ஆம் ஆண்டு நினைவு நாள்.

**கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எங்கள் உள்ளங்களில் என்றும் நினைவு நீங்காது. இந்த நூறாவது பிறந்த நாளில் வான் நின்று ஒளி வீசி தங்கள் குடும்ப வம்சம் தழைத்தோங்க வழி நடத்திட வேண்டி வணங்குகிறோம். தாங்கள் செய்த இறைப்பணியின் தொடர்ச்சியாக, தங்கள் அறம் நிலைத்திட தங்களின் இந்த நூறாவது பிறந்த நாள் ஆண்டில் வரவுகுடி அருள்மிகு விஸ்வநாதசுவாமி கோயிலின் கும்பாபிஷேகப் பணிகளை தொடங்குகிறோம். அப்பணிகள் சிறப்புற வானின்று வாழ்த்தவும் வேண்டுகிறோம்.**

**தங்கள் ஆசிகள் எங்களை வழி நடத்தி வளப்படுத்தட்டும் நல்வழியில்...**

என்றும் உங்கள் நினைவில்

| மனைவி: சு.அலமேலு ஆச்சி, வேலூர் | | |
|---|---|---|
| சு. வரதராஜன் | கி. ஜெயக்கொடி | ஞா. ஜீவா |
| வ. இராமாமிர்தம் | ரெ. கிருஷ்ணமூர்த்தி | சி. ஞானப்பிரகாசம், B.Sc., Business |
| வ. முருகபாண்டியன், B.Sc., D.Co.M., T.N. Assembly Secretariat, Chennai | வா. கிருத்திகா ராஜா, M.Com., Tiruvalluvar University, Vellore | Dr. சியாமளா கௌரி, M.E., Ph.D., VIT Bangalore |
| மு. தமிழ்செல்வி, B.A., Teacher, M.O.P. Vaishnav School, Chennai | கி. உமா மகேஸ்வரி, B.Com., VIT, Vellore | க. சம்பத், B.E., M.B.A., Business Analyst |
| மு. கோகுல், B.E., T.C.S., Chennai | பா. முத்துக்குமரன், DME, Business | ஞா.ச. மோனிஷ் கார்த்திக் |
| மு. சக்தி சௌந்தர்யா, B.Com., | மு. அக்ஷயா, B. Tech., | |
| | கி.இ. அஸ்வின் ராஜ், B. Tech. | |

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
25–5–1940

மறைவு :
20–4–2024

## கை. வெங்கடேசன் பிள்ளை

(ஆசிரியர் ஓய்வு, நெடுங்குளம்)

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம், நெடுங்குளம் கிராமம் கைலாசம் பிள்ளை – கௌரி ஆச்சி ஆகியோர் மகனும், வெ. ஜெயலட்சுமி அவர்களின் அன்பு கணவரும் எங்களின் அன்புத் தந்தையுமாகிய **கை. வெங்கடேசன் பிள்ளை** அவர்களின் நினைவோடு வாழும்

**வெ. ஜெயலெட்சுமி**

மகன்கள் :
**வெ. ராஜ்குமார்**
**ரா. எழிலரசி**
**வெ. செந்தில் குமார்**
**செ. அமுதா**

மகள் :
**அ. உமா - அன்பழகன்**
7402697169

பேரன்கள் – பேத்தி
**A. நடராஜன்**, B.E.,
**R. கௌரி**, M.C.A.,
**R. ஆகாஷ்**, B.E.,
**R. அபினாஷ்**, B.E.,
**S. பிரசன்னா**
**S. பிரவீன்**

# 2-ஆம்
# ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.04.1946

மறைவு
02.04.2023

மயிலாடுதுறை - பெசன்ட் நகர், ரோஜாத்தெருவில் வசித்துவரும்
**S.கலியபெருமாள்** அவர்களின் துணைவியார்

## திருமதி. K.லலிதா அவர்கள்

நினைவஞ்சலி

**என்றும் நீங்கா நினைவில் வாழும் :**

S.K.**பாரதி** ( மகன் )
P.**வைஷ்ணவி** ( மருமகள் )
பேரன்கள் :
B.**பார்கவ்**, B.**பிரணவ்**
சென்னை.

"நல்லாசிரியர்"
S.**கலியபெருமாள்** ( கணவர் )
தலைமையாசிரியர் ( ப நி )
19, பெசன்ட் நகர், ரோஜா தெரு, மயிலாடுதுறை.
: 94868 23271.

திரு. S.S.**விஸ்வநாதன்-ஜெயலெட்சுமி**, சோழம்பேட்டை.
மற்றும் உறவினர்களும்-நண்பர்களும்

# நெஞ்சத்து நினைவுகளில்
# நிலைத்துள்ளார் தில்லையம்மா!



தோற்றம்
25.08.1957

மறைவு
28.04.2014

## KP. தில்லைச்செல்வி
**KP. ஸ்டோர்**

## 11ஆம் ஆண்டு நினைவேந்தல்

தேங்கிவிட்ட நினைவுகளில்
தில்லையம்மா வாழ்கின்றார்
ஏங்கியவர் அவரேதான்
இருவிழிபோல் குடும்பத்தைத்
தாங்கியவர் அவரேதான்
தவிக்கவைத்தார் அவரேதான்!
நீங்காத நினைவுகளால்
நிதம் அவரை வணங்குகிறோம்.

KP. விஜய்
KPV. மீனாஶ்ரீ

KPV. கவுதம்
KPV. அஜய்

S. கலியபெருமாள்
KP. ஸ்டோர்.
6A, பெரியகடைவீதி,
மயிலாடுதுறை.
செல் : 9443651746

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது :
02–10–1955

உதிர்ந்தது :
29–04–2022

திருமதி. **ஞா. மங்களம்**

அன்பின் திருஉருவே! எங்கள் குலவிளக்கே! இன்முகத்தோடும் பாசத்தோடும் பழகிய நீ எங்களின் நீங்காத நினைவாக என்றென்றும் எங்கள் நெஞ்சில் வாழ்கிறாய்.

**P. ஞானப்பிரகாசம்** – கணவர்

விழுப்புரம்

**G. வள்ளி**

**B. அழகேசன்**

**A. அகிலன்**

**P. வர்ஷிணி**

நெய்வேலி

**G. லாவண்யா**

**C. செல்வமுத்துகுமார்**

**S. ராகுல்**

**S. சஞ்ஜனா**

சென்னை

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்ந்தது
23.01.1951

விண்ணில் மறைந்தது
02.05.2019

## திரு. க.இமயவரம்பன் பிள்ளை

சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி (ஓய்வு)

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், நகராமலை
தெய்வத்திரு. ஆ.கல்யாணசுந்தரம் பிள்ளை – சகுந்தலா
அவர்களின் மூத்த குமாரரும் எங்களின் தந்தையுமான
**க. இமயவரம்பன் பிள்ளை** அவர்களின்
ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

*என்றும் அவர்கள் நினைவில் வாழும்* திருமதி. **சுந்தரவடிவு இமயவரம்பன்**

| | | |
|---|---|---|
| I.ஆனந்தன் | S.செந்தில் | B.முத்துகுமார் |
| A.நிரஞ்சனா | S.காயத்ரி | I.இமயவள்ளி |
| A.இளம்பூரணன் | S.ப்ரவின் | M.தன்யஸ்ரீ |
| A.இளம்பிறையன் | S.சஞ்சன் | M.பிரணவ் |

*மற்றும் உறவினர்களும், நண்பர்களும்*

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 17–11–1932
மறைவு : 20–02–2025

தோற்றம் : 15–07–1929
மறைவு : 31–12–2024

திரு. **E.S. நடராஜன்**, B.A.,BL (RETIRED SUBJUDGE) ஏனாதிமங்கலம் 31–12–2024 அன்றும், அவரது துணைவியார் திருமதி. **தனலட்சுமி** 20–02–2025 அன்றும் இயற்கை எய்திவிட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

1. **Dr. N. விஜயரங்கன்** &
   **Mrs. உஷா விஜயரங்கன்** — மகன் – மருமகள்
2. **N. விஸ்வநாதன்** &
   **Mrs. சந்திரிகா விஸ்வநாதன்** — மகன் – மருமகள்
3. **Dr. சரவணன்** S/o Late **Dr. E.N. சுப்ரமணியன்** & — பேரன்
   **Mrs. மதுரவல்லி சரவணன்**

மற்றும்

**பேரன்கள் & பேத்திகள்**

# நங்கநல்லூர் சங்க அந்தமான் சுற்றுலா

## 07.02.2025 - 12.02.2025






















**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**
**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

## WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

**Posted at Pathrikachanel, Egmore**
**RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027**
**Date of Publication : 15th of Every Month** **15th / 16th April 2025**




**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**